கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

31-3-1974

40 காசு



வளரும் குழந்தைகளுக்கு வாய்ப்பான துணை இன்க்ரிமின்!*



SISTA'S INC-4A TM


துள்ளித் திரியும் கன்றுப் பருவம். ததும்பி வழியும் சக்தி ...பொங்கிப் பெருகும் பூரிப்பான ஆரோக்கியம்! இதுதான் வளரும் பருவம். உடலும் உள்ளமும் ஓங்கி வளரும் இச் சமயத்தில் உங்கள் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் வழங்கி வாருங்கள். பயனளிக்கும் வைட்டமின்கள், இரும்புச்சத்து, அதி முக்கிய அமினோ அமிலம். வளரும் பருவத்தில் அத்தியாவசிய மான இவை அனைத்தும் அடங்கியது. இன்க்ரிமின் டானிக்.

டாக்டர்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமான பெயர்

சயனமைட் இந்தியா லிமிடெட்டின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் சயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

இன்க்ரிமின் டானிக் வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்



உயிர்களிடத்து அன்பு வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்

கோகுலம்

மலர் 2 : இதழ் 26

மார்ச் 31, 1974


பிரமாதீச, பங்குனி 18



அட்டையில் :

ராஜாதி ராஜா மகன் இங்கே பாருங்க !
ராஜாத்தி ரோஜா முகம் என்றே தோணுதோ?
நல்லாப் பார்த்து ஆணு பெண்ணு என்று
சொல்லுங்க
இல்லாப் போனா நிச்சயமா 'ஏப்ரல் ஃபூலு'
தான்.

வண்ணப்படம் : திருச்சி மாடர்ன்



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10–00

ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

மானேஜர், கோகுலம், கல்கிப் பூங்கா, சேத்துப்பட்டு, சென்னை - 600031



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

வாமன முனிவர்

வா-சி என்ற எழுத்துக்களை யோக முறையில் தியானித்து காசியப முனிவர் அரிய பெரிய தவஞ் செய்து கொண்டிருந்தார். அவருடைய நெற்றியில் திருவெண்ணீறும், கழுத்தில் உருத்திராட்ச மாலையும் நெஞ்சில் அஞ்செழுத்தும் குடி கொண்டிருந்தன.

அவரருகில் அதிதி, திதி என்ற இரு மனைவியர்கள் அன்புடன் தொண்டு புரிந்து கொண்டிருந்தார்கள்.

அதிதி தன் மகனை இந்திரனுக்குத் துணைபுரியத் திருமால் தனக்கு மகனுகப் பிறக்கும்படி தவம் புரிந்து வந்தாள்.

திதி மூவுலகங்களையும் வெல்லுந் திறமுடைய புதல்வர்களைப் பெற நினைந்து, காலமல்லாத காலமாகிய மாலையில் காசியபரை மருவி இரணியன், இரணியாட்சன் என்ற இரு பேராற்றல் படைத்த மைந்தர்களைப் பெற்ருள்.

இரணியன் பிரமதேவரை வேண்டிப் பெருந் தவம் செய்து, மண்ணிலும் விண்ணிலும், அகத்திலும் புறத்திலும் இரவிலும் பகலிலும், உயர்திணை, அஃறிணை என்றவையாலும் மரணமில்லாத வரம் பெற்ருன்.

தன்னைத் தவிர வேறு கடவுள் இல்லை யென்று மூவுலகங்களிலும் பறையறையச் செய்து தேவர்களையும் முனிவர்களையும் அல்லல்படுத்திஞன். அவன் செய்த கொடுமைகட்கு அளவேயில்லை. தீயின்மீது விழுந்த புழுக்களைப் போல தேவர்கள் யாவரும் துன்புற்ருர்கள். திருமாலிடம் முறையிட்டார்கள்.

திருமால் நிலவுலகில் ஒரு வன்னி மரத்தடியில் விநாயகரை வழிபட்டார். விநாயகர் அவருக்குக் காட்சி தந்து, ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்ருர். ''கருணை வாரிதியே! இரணியகசிபுவை வதைக்கும் ஆற்றலையும் வகையையும் வழங்க வேண்டும்'' என்ருர்.

கணேசர், ''திருமாலே! உயர்திணையும் அஃறிணையும் சேர்ந்த நரசிம்மமாகத் தோன்றி, இரவும் பகலும் அல்லாத சந்தி வேளையில், உள்ளும் புறமும் அல்லாத வாசற்படியில் அமர்ந்து, விண்ணும் மண்ணு அல்லாதம் மடிமிசை வைத்து, ஆயுதம் அல்லாத நகத்தால் கீறி, அவன் உதிரம் கீழே விழாமல் குடித்து அவனைக் கொல்வாயாக'' என்று வரமும் திறமும் வழங்கியருளினர். அதன்படியே திருமால், கம்பத்தில் நரசிம்மமாகத் தோன்றி விநாயகர் கூறியபடி இரணியனை வதைத்தருளினர்.

இரணியாட்சன் பூமியைக் கடலில் அழுத்தி இடர் புரிந்தான். பன்றி வடிவெடுத்து நாராயணர் இரணியாட்சனை கொன்றருளினர். இதனல் விநாயகர் விஷ்ணு விநாயகர் என்று பெயர் பெற்ருர்.

இரணியனுடைய புதல்வர் பிரகலாதர். இவருடைய மைந்தன் விரோசனன். இவன் சூரிய பகவானை நோக்கிப் பெருந் தவம் செய்தான். ஆதித்த பகவான் அவன் முன் தோன்றி, அவனுடைய தவத்துக்கு மகிழ்ச்சியடைந்து ஒரு பொன் முடியைத் தந்தார். ''விரோசனு! இம்முடி எப்போதும் உன் தலையில் இருக்கட்டும். ஒருவராலும் உன்னை அழிக்க முடியாது. முடியில்லாத உன் தலையில் ஒருவன் கைவைத்தால் உன் தலை நூறு பிளவாகப் பிளந்து உன் உயிர் பிரியும். நீ இதனை மறவாமல் இம்முடி தரித்த தலையுடன் எச்சரிக்கையாக இருப்பாயாக'' என்று கூறினர்.

விரோசனன் மூவுலகங்களையும் கைப்பற்றி ஆட்சி புரிந்தான். அவனுக்கு ''மகாபலி'' என்ற மகன் பிறந்தான். ஆட்சியில் இருந்து விலகிய இந்திராதி இமையவர்கள் வைகுண்டம் போய் வைகுந்தனிடம் முறையிட்டார்கள்.

ஜெகந்நாதர் ஜெகன் மோகினி வடிவந்தாங்கி, கல்லும் புல்லும் உருகும் கட்டழகுடன் விரோசனன் முன்னேசென்ருர். மோகினியின் பேரெழிலைக் கண்டு விரோசனன் அழலிடைப்பட்ட மெழுகென உருகினுன். அவளைப் பின் தொடர்ந்தான்.

மோகினி, ''மூவுலகாளும் முடிவேந்தே, நீ என்னை விரும்புவது போல் நானும் உன்னை விரும்புகிறேன். ஆனல் எண்ணெய் இட்டுக் குளியாதவரையில் நான் உன்னைத் தொடமாட்டேன்'' என்ருள். மையலில் மயங்கிய விரோசனன் எண்ணெயைக் கொணரச் செய்தான்.

மையலால் மதிகலங்கிய விரோசனன் பொன் முடியைக் கழற்றி வைத்தான். ''தையலரசி! நீயே உன் மலர்க் கரத்தால் எனக்கு எண்ணெய் தேய்த்து என் உள்ளத்தைக் குளிரவை'' என்ருன்.

மோகினி அகமும் முகமும் மலர்ந்து எண்ணெய் எடுத்து அவன் தலையில் வைத்தாள். உடனே அவன் தலை நூறு பிளவாகி மாண்டான். மோகினியாக வந்த திருமால் மறைந்தருளினர்.



மகாபலி தந்தையாருடைய மறைவு குறித்து வருந்தினன். அரியணையில் அமர்ந்து மாட்சியுடன் ஆட்சி புரிந்தான். இந்திரனையும் அடக்கி ஆள வேண்டும் என்று அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் மொழிப்படி அசுவமேத யாகங்கள் செய்தான். நூறாவது யாகத்தைச் செய்து கொண்டிருந்தபோது. நூறு யாகம் முடிந்தால் இவன் இந்திரனுவான். இந்திரன் இது கண்டு சிந்தை நைந்தான். திருமாலிடம் போய் மகாபலியை அடக்கித் தனக்கு அருள் புரியுமாறு வேண்டிக் கொண்டான்.

திருமால் மகாபலியை வலிமையால் வெல்ல முடியாது. அவன் அளவற்ற தானங்கள் புரிபவன். தானத்தாலேயே அவனை அடக்க எண்ணினர்.

தன்னை மகனுகப் பெற அரிய தவம் செய்கின்ற அதிதிக்குத் திருமகனுகப் பிறந்தார். குள்ளனுகப் பிறந்த பிள்ளையைக் கண்டு காசியபர் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார்.

வாமனர் பிதாவைப் பணிந்து ''மகாபலிச் சக்கரவர்த்தியை அடக்க வழி யாது?'' என்று கேட்டார். காசியபர் விநாயக மந்திரத்தை உபதேசித்து. விநாயகருடைய அருளைப் பெற்று மகாபலியை வெல்லுமாறு கூறினர்.

வாமனர் விதர்ப்ப நாட்டில் சுதேச நகரத்தில் வன்னி மரத்தடியில் உள்ள விநாயகரைப் பேரன்புடன் வழிபட்டு அவருடைய கருணையைப் பெற்றுக் கொண்டு மகாபலியின் யாகசாலையை அடைந்தார். பால சூரியனைப் போல் விளங்கும் அவருடைய தோற்றத்தைக் கண்டு கழிபேருவகை யடைந்த மகாபலி அவரை வரவேற்று வணங்கி உபசரித்தான். ''உமக்கு என்ன வேண்டும்?'' என்ருன். அவன் வரையாது வழங்கும் வள்ளல். வாமன மூர்த்தி ''என் காலால் மூன்றடி நிலம் வேண்டும்'' என்று கேட்டார். மகாபலி புன்முறுவல் பூத்தார்.

''உமது மூன்றடி மண் மிகச் சிறிய இடந்தானே? மிகுதியாகக் கேளும்'' என்ருன்.

வாமனர், ''மகாபலி! போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. அந்த அளவுக்கு அதிக ஆசை இருக்கக் கூடாது. என் காலால் மூன்றடி மண் தந்தாலே திருப்தியடைவேன்'' என்ருர்.

திருமால் பேருருக் கொண்டு விண்ணையும் மண்ணையும் ஈரடியால் அளந்தார். மூன்ருவது அடியாக மகாபலியின் தலையில் தம் கால் வைத்து அவனைப் பாதாள உலகில் அமுத்தினுர். திருமாலின் திருவடி தன் சென்னிமிசை வைத்தது பற்றி மகாபலி மகிழ்ந்தான்.

அடுத்த மன்வந்திரத்தில் அவன் இந்திர பதம் பெறும் பேறு பெற்ருன். மகாபலி பாதாள வுலகில் இருந்து அறநெறியில் ஆட்சி செய்தான்.

வாமன மூர்த்தி வழிபட்டதனுல் கணேசருக்கு வாமன விநாயகர் என்ற பெயர் அமைந்தது.



ஆமைக்கு ஓடு


'கிண்கிணி'

ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்னாலே ஓர் ஆமையும் வாலபியும் நண்பர்களாக இருந்தன. வாலபி என்பது கங்காருவின் இனத்தைச் சேர்ந்த மிருகம். கங்காரு மாதிரியேதான் இருக்கும். ஒரு நாள் ஆமை வாலபியிடம், ''எனக்கு ரொம்பப் பசியாக இருக்கிறது. ஏராளமான வாழைப் பழங்களும் கரும்பும் உள்ள ஓர் இடம் எனக்குத் தெரியும். ஆனால் என்னால் அவைகளைப் பறிக்க முடியாது. நீ என்னோடு வா. உன்னுடைய பலமான கால்களினால் வாழை மரங்களையும் கருப்பங்கழிகளையும் வளைத்து ஒடித்துப் போடு. தரையிலிருந்தபடியே என்னால் அவைகளை வயிறார உண்ண முடியும். நீயும் நிறையச் சாப்பிட்டு மகிழலாம்'' என்றது.

வாலபி பலசாலியே தவிர அப்படியொன்றும் புத்திசாலியல்ல. வாழையும் கரும்பும் ஏராளமாக விளைந்து கிடக்கும் இடம் பினாமா என்ற மரங்கொத்திப் பறவையினுடையது என்று அதற்குத் தெரியாது. பினாமா மரங்கொத்திக்கு அந்த வட்டாரத்துக் கிராமங்கள் எல்லாம் சொந்தமானவை என்றும் அதற்குத் தெரியாது. ஆமையின் ஆசையை நிறைவேற்ற வாலபி அதனுடன் கரும்புத் தோட்டத்துக்குப் போயிற்று. குலை சாய்ந்த வாழை மரங்களையும் முற்றிய கருப்பங்கழிகளையும் தனது வலிமையான கால்களினால் வளைத்து மிதித்துக் கீழே தள்ளியது, ஆமை ஆசை தீர உண்டு மகிழ்வதற்காக. தானும் வேண்டிய மட்டும் வாழைப் பழங்களையும் கரும்பையும் சுவைத்தது.

இவை இரண்டும் தோட்டத்தில் புகுந்து இப்படி இஷ்டம்போல் விருந்துண்பதை யாருமே பார்க்கவில்லை. பறவைகள் எல்லாம் பகல் முழுதும் தோட்டத்தில் உழுது கொண்டிருந்தன. இருட்டும் நேரத்தில் இரவு உணவுக்காக ஒரு வகைக் கிழங்குகளைச் சேகரித்துக் கொண்டு கிராமத்துக்குத் திரும்பின. கிழங்குகளைக் கழுவித் தோல் நீக்கி வேக வைக்கும் பெரிய பாத்திரத்தில் போட்டுக் கொண்டே மலைமொங்கானான பினாமா, வாலாட்டிக் குருவியிடம், ''கடற்கரைக்குப் போய்த் தோல் பையில் உப்பு நீர் நிரப்பிக் கொண்டு வா. இந்தக் கிழங்குகளுக்கு ருசி கூட்ட அந்த உப்பு நீரால்தான் முடியும்'' என்று கட்டளையிட்டது. அந்தப் பிராந்தியத்துப் பறவைகளுக்கெல்லாம் எஜமானன் பினாமா.

மரங் கொத்தியின் உத்தரவுப்படி வாலாட்டி தோல் பையுடன் கடற்கரைக்குக் கிளம்பியது. தத்தித் தத்தி இங்கும் அங்கும் பார்த்தபடி தனது வாலையும் ஆட்டிக் கொண்டு போயிற்று வாலாட்டி. எதிரி எங்காவது ஒளிந்திருக்கிறானோ தன் மீது பாய என்ற சந்தேகக் குணம் அதற்கு. அதனால்



தான் அப்படித் தத்தித் தத்தி நின்று நிதானித்துப் போகும். வழியில் அதன் எஜமானனின் வாழைத் தோட்டத்தைக் கடந்து போக வேண்டும்.

வாலாட்டி வருவதைத் தூரத்திலேயே கண்ட ஆமைக்குப் பகீர் என்றது. பிணாமாவின் பணியாளன் அது என்பது ஆமைக்குத் தெரியும். இருந்தாலும் நிலைமையைச் சாதுரியமாகச் சமாளிக்க, ''வாலாட்டியாரே ! உன் எஜமானன்தான் எத்தனை நல்லவர் ! தங்கமான மனசு. நாங்கள் பசியால் வாடுவதைக் கண்டு மனம் இளகி, 'என் வாழைத் தோட்டத்துக்குப் போய் வேண்டிய மட்டும் வாழைப் பழங்களைச் சாப்பிட்டுப் பசியாறுங்கள்' என்று அன்போடு கூறினார். 'இந்தக் காலத்தில் இப்படி யார் கூறுவார்கள்?' என்று துணிந்து தைரியமாக ஒரு பெரிய பொய்யைச் சொல்லிற்று.

''எங்கள் எஜமானருக்கு ஈடு இணை ஏது ? அவர் ஆயிரத்தில் ஒருவர் அல்லவா?'' என்று சொல்லிவிட்டுத் தன் வழியே போயிற்று வாலாட்டி. என்றும் ஆமையின் பேச்சு வெறும் 'அளப்பு' என்பதை அது புரிந்து கொண்டது. 'அனுமதி இல்லாமல் தோட்டத்தில் புகுந்து திருடித் தின்று கொண்டே எப்படிப் பொய் சொல்கிறது?' என்று வியந்தபடியே தோல் பையில் கடல் நீரை நிரப்பிக் கொண்டு வேறு வழியாகக் கிராமத்துக்குத் திரும்பியது. வீட்டுக்குப் போனதும் எஜமானனான பிணாமாவிடம் தான் பார்த்ததைக் கூறியது.

வாழைத் தோட்டத்திலும் கரும்புத் தோட்டத்திலும் கொள்ளை போவதைக் கேட்டதும் பறவைகளெல்லாம் கழியும் கம்பும் வேலும் எடுத்துக் கொண்டு தோட்டத்தை நோக்கி விரைந்தன. தோட்டத்தை நாலா பக்கமும் சூழ்ந்து கொண்டன, திருடர்கள் எவ்வகையிலும் தப்பி ஓடிவிடாதபடி.

வாலபி வாழைப் பழ விருந்திலிருந்து தலை தூக்கிப் பார்த்தபோது தோட்டத்தின் நாலாபக்கமும் பறவைகள் வேல் ஏந்தி நிற்பதைக் கண்டது. அவ்வளவு தான்; அதற்குப் பீதி ஏற்படவே ஒரே தாவில் தோட்டத்திலிருந்து பாய்ந்து பறவைகளின் அரணைப் பிளந்து கொண்டு ஓடியே போய்விட்டது. அது ஒரு தாவலில் பல நூறு அடிகளைக் கூடக் கடந்துவிடுமே. ஆனால் ஆமையினால் அப்படித் தாவ முடியுமா? அல்லது பரபரப்புடன் வேகமாக ஓடத்தான் முடியுமா ? தவிர அந்தக் காலத்தில் ஆமைகளுக்கு இப்போது இருப்பதைப் போலக் கனமான கரடு முரடான மேல் ஓடும் கிடையாது. தான் வளைக்கப்பட்டதை அறிந்த ஆமை வாழை இலைகளுக்குஅடியில் போய் ஒளிந்துகொண்டது. ஆனால் பறவைகளின் பார்வையிலிருந்து தப்ப முடியுமா ? விரைவிலேயே ஆமையைப் பிடித்துக் கட்டிக் கைதியாக்கிக் கொண்டு கிராமத்துக்குத் திரும்பின பறவைகள்.

''என்னை ஏதும் செய்யாதீர்கள். அந்த வாலபிதான் எனக்கு விருந்து தருவதாகக் கூறி இங்கே அழைத்து வந்து வாழையையும் கரும்பையும் முறித்துப் போட்டு என்னைச் சாப்பிடச் செய்தது'' என்று பயத்தினால் நடுங்கும் குரலில் கெஞ்சியது ஆமை. ஆனால் பறவைகள் ஆமையின் கெஞ்சல்கள் எதையும் லட்சியமே செய்யவில்லை. ஆமையைக் குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கிக் கொண்டு போய்ப் பிணாமாவின் முன்னால் போட்டன. பிணாமாவும் ஆமையின் கெஞ்சலைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ''நாளை இரவு நமக்கு ஆமை சூப் விருந்து. இதை இப்படியே அந்த மேடையில் போடுங்கள்'' என்று உத்தரவிட்டது.




மறுநாள் காலை பறவைகளெல்லாம் வழக்கப்படி தோட்டங்களைக் கொத்தி உழுவதற்கும் உணவுப் பண்டம் சேகரிக்கவும் கிளம்பிவிட்டன. பினாமாவின் குழந்தைகள் மட்டுமே வீட்டிலிருந்தன. பறவைகளெல்லாம் வெகுதூரம் போனதும் கட்டுண்டு கிடந்த ஆமை தன் குரலில் பாசத்தையும் நேசத்தையும் வரவழைத்துக் கொண்டு பினாமாவின் குழந்தைகளைக் கூப்பிட்டது.

''குழந்தைகளே! என் கட்டுக்களை அவிழ்த்து விடுங்கள். நான் உங்களுக்கு வேடிக்கையான பல விளையாட்டுக்களைச் சொல்லித் தருகிறேன். நாம் கூடி விளையாடி மகிழலாம்'' என்றது.

மெள்ள மெள்ள நகரும் ஆமை தப்பி ஓடிவிடாது என்ற எண்ணத்தில் மொங்கான் குழந்தைகள் அதன் கட்டுக்களை அவிழ்த்துவிட்டன. ஆமை மேடையிலிருந்து கீழே வருவதற்கும் உதவின. ''வீட்டிலிருந்து ஏதாவது நகை நட்டு பாத்திரம் பண்டம்கொண்டு வாருங்கள். நான் ஓர் அற்புதமான விளையாட்டைச் சொல்லித் தருகிறேன்'' என்றது ஆமை. குழந்தைகள் வீட்டினுள் ஓடின. கண்ணில் பட்டதை, கையில் கிடைத்தவைகளையெல்லாம் கொண்டு வந்தன. பினாமாவின் வளையல்களை, கழுத்தணிகளைத் — எல்லாம் சோழியினால் ஆனவை — தான் அணிந்து கொண்டது ஆமை. மரத்தாலான ஒரு கப்பறை கொண்டு வந்திருந்தது ஒரு மொங்கான் குழந்தை. அதைத் தன் முதுகில் கவிழ்த்து மூடிக் கொண்டு 'தத்தக்கா பித்தக்கா' என்று இந்த அலங்காரங்களுடன் ஆமை நடைபோட்டது. கோமாளி போன்ற இதன் தோற்றத்தையும் மெதுவாக இது நடப்பதையும் கண்ட மொங்கான் குழந்தைகள் அதன் மீது பறந்தும் விழுந்தும் புரண்டும் சிரித்து மகிழ்ந்தன. இப்படியே இவைகளுக்கு வேடிக்கை காட்டியபடி ஆமை கொஞ்சம் கொஞ்சமாகத் தான் தப்பிச் செல்லும் வழியில் முன்னேறிக் கொண்டிருந்தது. பினாமாவின் குஞ்சுகள் இதை அறியவில்லை. ஆமையைக் கேலி செய்தபடி அவைகளும் அதைத் துரத்திக் கொண்டிருந்தன. ஆமை மெள்ள மெள்ளக் கடற்கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது எதிரே பினாமாவும் பறவைகளும் வீடு திரும்பிக் கொண்டிருந்தன, தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு. அப்போதுதான் மொங்கான் குழந்தைகளுக்கு ஆமையின் தந்திரம் புரிந்தது. ''சீக்கிரம், சீக்கிரம்.... ஆமையைப் பிடியுங்கள். அது கடற்கரையை நோக்கிப் போகிறது'' என்று கூச்சலிட்டன. குழந்தைகளின் கூச்சலைக் கேட்ட பினாமாவும் பறவைகளும் வேகமாக ஓடி வந்தன. ஆனால் அதற்குள் ஆமை தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு வேகமாக ஓடிக் கடலுக்குள் புகுந்துவிட்டது.

''கற்களைப் பொறுக்கி அதன் மீது வீசுங்கள்'' என்று கட்டளையிட்டது பினாமா. அதன்படியே பறவைகள் செய்தன. பறவைகள் வீசிய கற்களினால் பினாமாவின் கிளிஞ்சல் சோழி வளையல்களையும் கழுத்தணியையும் உடைக்க முடிந்ததே தவிர மரத்தினால் ஆன கப்பறையை ஏதும் செய்ய முடியவில்லை. கவிழ்த்த கப்பறையுடன் பத்திரமாகக் கடல் அடிக்கு நீந்திப் போய்விட்டது ஆமை. அன்றிலிருந்து அதன் முதுகில் அந்த மரக் கப்பறை அப்படியே நிலைத்துவிட்டது. அதன் பிறகு அதன் வழித்தோன்றல்களாக வந்த ஆமைகளும் அதே போன்ற ஓடு மூடிய உடலுடன் தோன்றலாயின. ஆமைகளுக்கு ஓடு வந்த கதை இதுதான்.





இவர்கள் யார்?


அம்மா என்றால் அன்னை
சும்மா தருவாள் வெண்ணெய்!
அழுதால் அணைப்பாள் என்னை
அமுதாய்ப் பொழிவாள் அன்பை !

அப்பா அருமை அப்பா
அழகாய் அணிவார் ஜிப்பா !
கணக்குப் போட்டால் தப்பா
கனைக்கும் முதுகில் டப்பா !

பாட்டி பழைய பாட்டி
பாங்காய்க் காலை நீட்டி
சோற்றை வாயில் ஊட்டி
சிரிப்பாள் வாயைக் காட்டி !

தம்பி நல்ல தம்பி
தரத்தில் தங்கக் கம்பி !
பண்டம் கொடுத்தால் நம்பி
பானை யாகும் கும்பி !

— ஆதினம்



புதுமைக் காகம்

தாகம் கொண்ட காகமொன்று
தவித்து மிகவும் களைத்ததனால்
வேகமாக அங்குமிங்கும்
விரைந்து தேடிப் பறந்தபின்னே

ஆங்கொரு வீட்டின் மூலையிலே
அழகிய வெண்கலக் குடத்தினிலே
தேங்கிக் கிடந்த நீர்கண்டு
தேவைக் கதனை நாடியதே

மூக்கை வைத்துக் குடிப்பதற்கு
முடிய வில்லை காகத்தால்
வாய்க்கு எட்டா நீரதனை
வாகாய்க் குடிக்க எண்ணியதே

அருகில் இருந்த கடையினிலே
அடுக்கி இருந்த 'ஸ்டிரா'க்களிலே
உருவி ஒன்றைக் கொண்டுவந்து
உறிஞ்சி நீரைக் குடித்ததுவே !

தாகம் தீர்ந்து காகமது
தளர்ச்சி நீங்கிப் பறந்ததுவே
ஆகும் செயலைச் சிந்தித்து
ஆற்றின் யாவும் வெற்றி தரும்.

— லோகாம்பாள்

பலே திருடன் பக்காத் திருடன்

வாண்டுமாமா

மகாராணி மரணப் படுக்கையிலிருந்தாள். ரொம்பவும் அழகான ராணி அவள். அவளுக்கு முத்துப் போல் மூன்று பிள்ளைகள். தான் இனி பிழைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்ட ராணி தன் கணவரான ராஜாவை அருகில் அழைத்தாள்.

''அரசே! உங்களுக்கு இளமை மாறவில்லை. என் மறைவுக்குப் பிறகு நீங்கள் மறுபடியும் திருமணம் செய்து கொள்ளுவதையேதான் நானும் விரும்புகிறேன். ஆனால் என் குழந்தைகள் இன்னொரு பெண்ணிடம் கஷ்டப்படுவதை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. ஆகவே நம் நாட்டை அடுத்த கடலின் நடுவே உள்ள சிறு தீவில் ஓர் அரண்மனையைக் கட்டி அங்கு என் குழந்தைகள் தக்க வயது வரும் வரை எல்லாச் சௌகரியங்களுடனும் வளரும்படி ஏற்பாடு செய்யுங்கள். இப்படிச் செய்வேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால்தான் நான் நிம்மதியாக இறப்பேன்'' என்று கண்ணீர் மல்கக் குரல் தழுதழுக்கக் கேட்டுக் கொண்டாள் ராணி.

மன்னரும் அப்படியே அவள் கையில் அடித்துச் சத்தியம் செய்து கொடுத்தார். மகாராணி மகிழ்ச்சியோடு கண் மூடினாள். வாக்களித்தபடியே கடலின் நடுவே இருந்த தீவில் ஓர் அற்புதமான அரண்மனையைக் கட்டித் தமது மூன்று பிள்ளைகளையும் அங்கு குடியேற்றி ஒரு குறைவுமில்லாமல் வளர்ந்து வரும்படி செய்தார். வருடங்கள் உருண்டன. மக்கள் தங்களுக்கு மகாராணி வேண்டும் என்று வற்புறுத்தவே மன்னரும் மறுமணம் செய்து கொண்டார்.

இரண்டாவது மனைவியாக வந்தவளும் அற்புத அழகி. நல்லவளும்கூட. அவளுக்கும் ஒரு மகன் பிறந்தான். தனக்கென்று ஒரு குழந்தை பிறந்த பிறகுதான் பெண்களுக்குப் பொறுமையும் அசூயையும் வரும் போலும். முதலில் குணவதியாக இருந்த புதிய ராணியும் இப்படித்தான் மாறினாள்.

மறைந்த மகாராணியையும் அவளது பிள்ளைகளையும் எல்லோரும் மறந்தே போனார்கள். புதிய ராணிக்கு அவர்களைப் பற்றி ஏதுமே தெரியாது. ஒரு நாள் தற்செயலாக இதை அரண்மனையின் துணிகளைச் சலவை செய்து தரும் வண்ணாத்தி மூலமாக அறிந்தாள். பேச்சு வாக்கில் ''உன் பிள்ளை எங்கே ராசாவாகப் போறான்?'' என்றாள் வண்ணாத்தி. வந்ததே ராணிக்குக் கோபம்! ''என்ன துணிச்சல் உனக்கு? என்னிடம் இப்படிச் சொல்ல?'' என்றாள் ராணி.

வண்ணாத்தியிடமிருந்து பழைய செய்திகள் முழுவதையும் அறிந்து கொண்ட ராணிக்குக் குரோதம் கொழுந்து விட்டது.

''என் மூத்தாள் பிள்ளைகளை நான் சாகடித்தாகவேண்டும். அதற்கு நீதான் ஒரு வழியும் சொல்லித் தர வேண்டும்'' என்று வண்ணாத்தியை வளைத்துப் போட்டாள் இளைய ராணி.

''மகாராஜாவிடம் உன் கோபத்தைக் காட்டாமல், 'எனக்கு உங்கள் மூத்த மனைவியைப் பற்றியெல்லாம் தெரியும் என்று கூறி அந்த மூன்று ராஜகுமாரர்களையும் இந்த அரண்மனைக்கே அழைத்து வரச் சொல். அவர்களிடம் அன்பைக் கொட்டிக் குழைந்து பழகு. அந்த மூன்று இளவரசர்களும் உன்னை முழுமையாக நம்பும்படி நடந்துகொள். பிறகு அவர்களைக் கௌரவிக்க ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய். அந்த விழாவிலே விளையாட்டுக்களுக்கும் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய். அதில் சொக்கட்டான் விளையாட்டையும் சாமர்த்தியமாகப் புகுத்து.

'' 'அந்த ஆட்டத்தில் யார் தோற்றுப் போகிறார்களோ அவர்கள் ஜெயித்தவர்கள் எது சொன்னாலும் அதன்படி நடக்க வேண்டும்' என்ற நிபந்தனையை விதித்துக்கொள். இதோ இந்தப் பகடைக் காய்களை வைத்துக்கொள். நீ தோற்க மாட்டாய். ஆட்டத்தில் வென்ற நீ பொற் சலங்கைகள் கட்டிய காலகண்டனின் குதிரையைக் கொண்டு வரும்படி அவர்களுக்கு உத்தரவிடு. அந்தக் குதிரையைக் கொண்டுவரப்போகும் அவர்கள் திரும்பவே மாட்டார்கள். உன் விருப்பமும் நிறைவேறும்'' என்று திட்டம் வகுத்துக் கொடுத்தாள் வண்ணாத்தி.


வண்ணாத்தியின் திட்டப்படியே ராணி நடந்து கொண்டாள். இளவரசர்கள் அரண்மனைக்கு அழைத்து

வரப்பட்டார்கள். விழாக் கொண்டாடப்பட்டது. விருந்தும் கேளிக்கையும் வேடிக்கையும் விளையாட்டுமாக அமர்க்களப்பட்டது அரண்மனை. இளவரசர்களைத் தன்னுடன் சொக்கட்டான் ஆட அழைத்தாள் அரசி. நிபந்தனைகளையும் தெரிவித்தாள். மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார்கள் மன்னரின் குமாரர்கள். முதல் இளவரசன் ராணியுடன் ஆடித் தோற்றுப் போனான். இரண்டாவது இளவரசனும் தோற்றுப் போனான். மூன்றாவது இளவரசன் புத்திசாலி! ஜெயித்து விட்டான். ராணிக்குச் சங்கடமாகி விட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள். மூன்றாவது இளவரசனை ஒழிக்கப் பிறகு வேறு உபாயங்களைக் கையாளலாம் என்ற முடிவோடு தோற்றுப்போன முதல் இரண்டு பேரிடமும் ''நிபந்தனைப்படி நீங்கள் இருவரும் காலகண்டனின் குதிரையைக் கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டாள், இளவரசர்கள் இருவரும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார்கள். ஆனால் அரச சபையில் இருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். மன்னரின் முகம் பீதியினால் வெளுத்துப் போயிற்று.

''இதென்ன விளையாட்டு? அந்தக் குதிரையின் மீது யார் கை பட்டாலும் பொற் சலங்கைகள் குலுங்கிக் காலகண்டனையும் அவன் காவலர்களையும் உஷாரப்படுத்தி விடும். காலகண்டன் தன்னிடம் அகப்பட்டவர்களைக் காளவாயில் போட்டுச் சாம்பலாக்கி விடுகிறான். அப்படி இருக்க இவர்களை இந்தக் காரியத்துக்கு அனுப்புகிறாயே'' என்று கடிந்து கொண்டார் அரசர். ஆனால் ராணி ஒப்பந்தப்படி போய்த்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்.

இந்தச் சமயத்தில் வெற்றி பெற்றிருந்த மூன்றாவது இளவரசன் சொன்னான். ''ஒப்பந்தப்படி என் விருப்பத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமல்லவா? என் அண்ணன்மார்களோடு அவர்களுக்குத் துணையாக நானும் போகிறேன். ஆனால் நான் உங்களுக்கு இடும் நிபந்தனை இதுதான்: அரண்மனையின் மிக உயரமான உப்பரிகையிலே நாங்கள் திரும்பி வரும்வரை நீங்கள் தங்கி யிருக்க வேண்டும். நாங்கள் திரும்பா விட்டால் இறந்து விட்டதாக முடிவு செய்து பிறகு நீங்கள் இறங்கி வரலாம். அந்த உப்பரிகையிலிருக்கும் போது சோள மாவினால் ஆன ரொட்டியும் குளிர்ந்த நீரும் தவிர வேறு எதுவும் சாப்பிடக் கூடாது. இப்படி ஏழு வருஷங்கள் வரை எங்கள் வரவுக்காகக் காத்திருக்க வேண்டும்.''

இளவரசர்கள் மூவரும் தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டார்கள். கானகத்தில் வெகு தூரம் போனதும் ஒரு வயோதிகனைச் சந்தித்தார்கள் இளவரசர்கள். வேடிக்கையான முகத்துடன் கொஞ்சம் நொண்டியுமான அந்தக் கிழவனுடன் பேச்சுக் கொடுத்தார்கள். தான் ஒரு பலே திருடன்



என்று கூறினான் கிழவன். 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்றும் ராஜகுமாரர்களைக் கேட்டான். தாங்கள் மேற்கொண்டுள்ள காரியத்தைக் கூறியதும் திருடன் துள்ளிக் குதித்தான்.

''உங்களால் அந்தக் குதிரையைக் கவர்ந்து வரவே முடியாது. இந்தப் பிராந்தியத்திலேயே 'பலே திருடன், பக்காத் திருடன்' என்று பெயர் வாங்கியவன் நான். என்னாலேயே அந்தக் குதிரையிடம் இதுவரை நெருங்க முடியவில்லை. நீங்கள் காளவாய்க்கு உணவாகப் போக வேண்டியதுதான்'' என்றான்.

'' நீ சொல்லுவது உண்மைதான். ஆனால் அந்தக் குதிரை இல்லாமல் நாங்கள் திரும்பினாலும் எங்கள் சின்னம்மா எங்கள் தலையை வெட்டி உருட்டத்தான் போகிறாள்'' என்றார்கள் ராஜகுமாரர்கள்.

''அந்தக் கெட்ட எண்ணமுடைய சின்னம்மாவின் கையினால் சாவதை விடக் காலகண்டனுடைய காளவாயில் சாம்பலாவது மேல்தான். நானும் உங்களுடன் வருகிறேன். ஏதாவது உபாயம் செய்து குதிரையைக் கவர்ந்து வர முடியுமா, பார்க்கலாம்'' என்று திருடனும் இளவரசர்களுடன் சேர்ந்து கொண்டான்.

காலகண்டனுடைய நாட்டுக்குப் போனார்கள் நால்வரும். இரவு வரும் வரை காத்திருந்தார்கள். பக்காத் திருடன் தன் சாமர்த்தியத்தை யெல்லாம் பயன்படுத்திக் காலகண்டனுடைய குதிரை லாயத்துக்குள் புகுந்தான் இளவரசர்களுடன். ஆனால் அவனையும் விடச் சாமர்த்தியமான குதிரை அன்னியர்களின் வாசனையைக் கண்டதுமே தன் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு கனைத்தது. சலங்கைகள் கலகலவென்று குலுங்கின. காவல்காரர்கள் வந்து சூழ்ந்துகொண்டார்கள். இளவரசர்களையும் கிழவனையும் கட்டிக் கொண்டு போய்க் காலகண்டன் முன்பு நிறுத்தினார்கள்.

''என் அதிசயக் குதிரையைத் திருடவா திட்டமிட்டு வந்தீர்கள்? உங்களை ஒவ்வொருவராகக் காளவாய்க்குக் காவு தருகிறேன். ஒருவன் கருகிச் சாவதை மற்றவர்கள் கண்டு மகிழட்டும். இளவரசர்களில் மூத்தவனிலிருந்து ஆரம்பிக்கலாம். கடைசியாக இந்தக் கிழவனை வைத்துக் கொள்ளுவோம்'' என்றான் காலகண்டன். அவன் கட்டளைப்படி மூத்த ராஜகுமாரனைக் கட்டித் தூக்கிக் காளவாய்க்குள் வீச முற்படும் போது, ''இப்போது இந்த இளவரசன் எப்படி மரணத்தின் விளிம்புக்குப் போயிருக்கிறானோ, அதே போல நானும் ஒரு தடவை போனதுண்டு. ஆனால் தப்பித்துவிட்டேன். அதே போல இந்த இளவரசனும் தப்பலாம்'' என்றான் பக்காத் திருடனான கிழவன்.

''அது எப்படி? நடக்காத செயலாக இருக்கிறதே, நீ எப்படித் தப்பினாய்? அதைச் சொல், கேட்போம்.''

''இந்த இளவரசனுக்கு இப்போது ஏற்பட்டுள்ள அபாயத்தை விட எனக்கேற்பட்ட அபாயம் பெரியது என்று நீ நினைத்தாயானால் இந்த இளவரசனின் குற்றத்தை மன்னித்து விடுதலையளிப்பதானால் நான் என்னுடைய கதையைக் கூறுகிறேன்'' என்றான் கிழவன்.

''அப்படியே செய்கிறேன்'' என்று கூறித் தன் ஆட்களுக்கு இளவரசனின் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்தும்படி சைகை செய்து கிழவனின் கதையைக் கேட்கத் தயாரானான் காலகண்டன். கிழவனும் தன் கதையைக் கூறலானான்.

''நான் இளைஞனாக இருந்தபோது ஒரு நள்ளிரவில் இதே போல ஒரு பெரிய கரிபடிந்த காளவாயின் ஓரத்தில் ஒளிந்து கொண்டிருந்தேன். அப்போது மூன்று சூனியக்காரிகள் காளவாயினருகே வந்தார்கள். ஒவ்வொருவரிடமும் ஒரு மூட்டை இருந்தது. அது நிறையப் பொற்காசுகள். மூட்டைகளைக் கீழிறக்கிய அவர்களில் ஒருத்தி சொன்னாள்: ''நாம் ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்தப் பொன் மூட்டைகளுடன் தூங்கிக் கொண்டிருப்பதைக் கறுந் திருடன் கண்டானானால் நமக்கு ஒரு காசு கூட இல்லாமல் கொண்டே போய்விடுவான். ஆகவே தூங்காமலிருக்க வேண்டும்'' என்றாள். அப்போதே என் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. தூங்கக் கூடாது என்று பேசிக் கொண்டாலும் அவர்களால் அதிக நேரம் விழித்திருக்க முடியவில்லை.

அயர்ந்து தூங்கும் அவர்கள் தலைக்கடியிலிருந்து அந்தப் பொற்காசு மூட்டைகளை எடுத்துக் கொண்டு ஓட்டம் எடுத்தேன். ஆனால் அதிக தூரம் போகவில்லை. பின்னால் ஒரு வேட்டை நாயும் ஒரு முயலும் ஒரு கழுகும் என்னைத் துரத்தி வருவதைக் கண்டேன். எனக்கு நிச்சயம் தெரியும், அந்தச் சூனியக்காரிகள்தான் இப்படி உருமாறி என்னைத் தொடர்ந்து வருகிறார்கள் என்று. ஆகவே நான் ஒரு பெரிய வில்வ மரத்தின் மீது ஏறிக் கொண்டேன். சூனியக்காரிகள் வில்வ மரத்தின்மீதுமட்டும் ஏறமாட்டார்கள்.



மரத்தின் அடிக்கு வந்த சூனியக்காரிகளில் ஒருத்தி தன் நிஜ உருவை எடுத்துக்கொண்டாள். மற்ற இருவரும் பட்டறைக் கல்லாகவும் பழுக்கக் காய்ச்சிய இரும்பாகவும் மாறினார்கள். முதல் சூனியக்காரி பட்டறைக் கல்லில் அந்த இரும்பை வைத்து அதைத் தட்டிக் கோடரியாக உருவாக்கினாள். அதைக் கொண்டு நான் உட்கார்ந்திருக்கும் மரத்தை வெட்டுவதற்கும் கையை ஓங்கிவிட்டாள். அப்போது ஒரு கோழி 'கொக்கரக்கோ' என்று கூவியது. கிழக்கே ஆதவனின் ஒரு கீற்றும் பளீரிட்டது. அவ்வளவுதான்; மூன்று சூனியக்காரிகளும் ஓடியே போய் விட்டார்கள், என்னை விட்டு விட்டு! சூரியன் உதித்துவிட்டால் அவர்களுக்குப் பலம் போய்விடும். இப்போது சொல்லுங்கள், இந்த இளவரசனைவிட நான் மரணத்தின் மிகமிகச் சமீபம் போனேனா இல்லையா ?'' என்று கேட்டான் பலே திருடன்.

''உண்மைதான். நீ வென்றாய். இந்த இளவரசனும் விடுதலை பெற்றான்'' என்று கூறிய காலகண்டன் தன் ஆட்களிடம் ''காளவாயின் கங்குகளைக் கிளறி விடுங்கள். இரண்டாவது இளவரசனைத் தீக்கு உணவாக்கி வைப்போம்'' என்றான்.

''நான் நினைக்கிறேன், அந்த இரண்டாவது இளவரசன்கூடச் சாகப் போவதில்லை. இப்படித்தான் நானும் ஒரு தடவை மரணத்தின் இரும்புப் பிடிக்குள் சிக்கிக் கொண்டேன். ஆனால் இதோ இப்போது உயிரோடு இல்லையா?''

''அதெப்படி? அதையும் கூறு. முதலில் கூறியதைவிட இது அதிசயமாக இருந்தால் இந்த இளவரசனுக்கும் உயிர்ப் பிச்சை அளிக்கிறேன்'' என்றான் காலகண்டன்.

கறுப்புத் திருடன் தன் இரண்டாவது கதையைக் கூறத் தொடங்கினான்.

ஒரு சமயம் ஒரு கோமகவரன் இறந்து போனான். அவன் விருப்பப்படியும் அந்த நாட்டுப் பழக்கப்படியும் அவனுடன் அவன் சேமித்த அத்தனை செல்வத்தையும் வைத்துப் புதைப்பதாக இருந்தார்கள். செத்துப் போன அந்தக் கோமகவரனை விட உயிரோடு உள்ள எனக்கு அந்தச் செல்வம் தேவைப்பட்டது. சவ அடக்கத்துக்கு முதல் நாள் இரவு கோமகவரனையும் அவனோடு புதைக்கப்பட வேண்டிய பெருஞ் செல்வத்தையும் வைத்திருந்த அறைக்குள் சாமர்த்தியமாக நுழைந்து சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அந்தக் கூடத்தில் ஒரே ஒரு அகல் விளக்கு மட்டுமே இருட்டை விரட்டப் போராடிக் கொண்டிருந்தது. அப்போது அந்த அறைக்குள் இன்னோர் உருவம் நுழைந்தது. எனக்கு உடலெல்லாம் பயத்தினால் தெப்பலாக நனைந்து விட்டது. இறந்த கோமக

வரனின் பிசாசோ, ஆவியோ அது என்று கலங்கிப் போனேன். இருந்தாலும் உடனே சுதாரித்துக் கொண்டு என் குத்து வாளை எடுத்து அதன் மீது வீசினேன். 'ஆ' என்ற ஒலியுடன் அது தரையில் சரிந்தது. ஓடிப் போய்ப் பார்த்தேன். ஆனால் அது ஆவி அல்ல. கோடீசுவரனுடைய உறவினர்களில் ஒருவன். என்னைப் போலவே ஆனால், எனக்கு முன்னதாகச் சவப்பெட்டிக்குள்ளிருந்த பொருள்களை யெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பி யிருக்கிறான். என் கத்திக்கு இரையாகி விட்டான். என் காரியம் சுலபமாகி விட்டது. அவன் அருகே தயாராக இருந்த செல்வ மூட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பத் தயாரானபோது வாசல் பக்கம் தடதட வென்ற காலடி ஓசை கேட்டது.

''அந்தக் கறுப்புத் திருடனுகத்தான் இருக்கும். சவத்தின் அருகேயுள்ள செல்வத்தைக் 'கொள்ளையிட வந்திருப்பான்'' என்று காவலர்கள் கூறிக் கொண்டே வந்தார்கள். என் நிலை எப்படி இருக்கும்? சட்டென்று நான் அந்தச் செல்வ மூட்டையை வாசல் கதவுக்கருகில் ஒளித்துவிட்டுக் கத்திக் குத்துப் பட்டு இறந்து கிடக்கும் ஆளைத் தூக்கி என் முன்னால் நிறுத்திப் பிடித்துக் கொண்டு அப்படியே முன்னேக்கி நகரலானேன். வேகமாக உள்ளே புகுந்த காவல்காரர்கள் மங்கிய ஒளியில் மெதுவாக நகர்ந்து வரும் உருவத்தைக் கண்டதும், ''அதோ! அதோ! கருந் திருடன். அவனேதான்'' என்று கூறித் தங்கள் கையிலிருந்த ஈட்டியை வீசினார்கள். கத்திக் குத்துண்டு இறந்தவன் மீது ஈட்டி பாய்ந்தால் என்ன, வேல் புகுந்தால் என்ன? நான் பின்னாலிருந்து வேதனைக் குரல் கொடுத்தபடி அந்தச் சடலத்தைக் கீழே சரிய விட்டேன். காவலாட்கள் பக்காத் திருடனைத் திறமையாகக் கொன்று விட்டதாக எண்ணிக் கோடீசுவரனின் சவப் பெட்டியின் அருகே ஓடினார்கள், செல்வமெல்லாம் இருக்கிறதா என்று பார்க்க. நான் ஓசைப்படாமல் ஒளித்து வைத்திருந்த மூட்டையுடன் யார் கண்ணிலும் படாமல் வெளியேறி விட்டேன்.

கதையை முடித்ததும் காலகண்டன் கைதட்டிப் பாராட்டினான் திருடனை. ''இரண்டாவது இளவரசனுக்கும் விடுதலை வாங்கிக் கொடுத்து விட்டாய். மூன்றாவது இளவரசனுக்கும் இதே போல் விடுதலை வாங்கிக் கொடுத்து விடுவாய் என்றே நினைக்கிறேன். எனக்கே கூட அந்தக் குட்டி இளவரசனிடம் ஏதோ ஒரு பரிதாப உணர்ச்சி ஏற்படுகிறது. எங்கே உன்னுடைய சாகஸங்களில் ஒன்றைக் கூறு பார்க்கலாம்'' என்றான் காலகண்டன்.

''அந்தக் குட்டி இளவரசனிடம் எனக்குமே கூட ரொம்பப் பாசம். உங்களைப் பிரமிப்பூட்டக் கூடிய என்னுடைய சாகஸச் செயலை அவனுக்காகக் கூறுகிறேன், கேளுங்கள்.''

ஒரு சமயத்தில் நான் கானகத்தில் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்போது அந்த அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாழடைந்த அரண்மனையைக் கண்டேன். அதனுள்ளே ஒரு பெண் தன் மடியில் ஒரு சின்னக் குழந்தையைப் போட்டுக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். நான் அவளிடம் போய், ''ஏனம்மா அழுகிறாய்? இந்த அரண்மனைக்கு உரியவர் யார், எங்கே?'' என்று கேட்டேன்.

''இந்த அரண்மனைக்கு உரியவர் இங்கு இல்லாதிருப்பது உன் நல்ல காலந்தான். ஒற்றைக் கண் ராட்சதன் இதன் உரிமையாளர். மனிதர்களின் மாமிசத்தை உண்டு மகிழ்பவன். இதோ இந்தக் குழந்தையை எங்கிருந்தோ கொண்டு வந்து சமைத்து வைக்கச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். இந்த அழகான குழந்தையைக் கொன்று பக்குவம் செய்ய வேண்டுமே என்றுதான் அழுது கொண்டிருக்கிறேன்'' என்றாள் அந்தப் பெண்.

''இந்தக் குழந்தையை மறைத்து வைக்கத் தகுந்த இடம் இருக்குமானால் கூறு. நான் இதை அங்கு கொண்டு போய்க் காப்பாற்றி விடுகிறேன். நீ ஓர் ஆட்டுக் குட்டியைப் பக்குவம் செய்து தயாராக வை அந்த அரக்கனுக்கு. இந்தக் குழந்தையினாலான உணவுதான் இது என்று அவன் நம்புவதற்கு இந்தக் குழந்தையின் கண்டு விரலை மட்டும் வெட்டி அதன் மீதாக வைத்துவிடு'' என்று கூறினேன்.

அவளும் அதன்படியே ஓர் ஆட்டுக் குட்டியை வெட்டிச் சமையல் செய்யலானாள். நான் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவள் குறிப்பிட்ட இடத்தில் கொண்டு போய் ஒளித்து வைத்து விட்டு ஓடி வந்தேன். அதற்குள் ராட்சதனும் திரும்பிக் கொண்டிருந்தான். என்னைக் கண்ட அந்தப் பெண் பரபரப்புடன் ''சீக்கிரம் ஓடு. அதோ அந்த அறைக்குள் போய் உன் உடைகளை யெல்லாம் களைந்து விட்டு அங்கு கிடக்கும் இறந்தவர்களோடு ஒருவனாக உடலை அசைக்காமல் கிட'' என்று கூறி விரட்டினாள் என்னை.

அவன் குறிப்பிட்ட அறைக்குள் ஓடினேன். அது ஒரு பயங்கரமான இடம். அங்கு ஆண் பெண் குழந்தைகளின் உடல்கள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டுக் கிடந்தன. நானும் அந்தப் பிணக் குவியலில் ஒருவனாக விழுந்து கிடந்தேன்.

அடுத்த அறையில் அரக்கன் கூச்சல் போடுவது கேட்டது. ''இதன் சுவை குழந்தை மாமிசத்தினுடையதாக இல்லையே. ஆட்டுக் குட்டியின் இறைச்சி போல் அல்லவா இருக்கிறது? உண்மையைச் சொல்'' என்று உறுமினான். அந்தப் பெண், குழந்தையின் கண்டு விரலைக் காட்டிய பிறகு அதிக ஆர்ப்பாட்டம் இன்றி உணவு உட்கொண்டான். இருந்தாலும் ''என் பசியே அடங்கவில்லை. அந்த இறைச்சிக் குவியல் அறையில் சில நல்ல எலும்புகளை எடுத்துக் கடித்தால்தான் என் பசி தணியும்'' என்று கூறியபடி நான் முடங்கிக் கிடந்த இடத்துக்கு வந்தான். என் நெஞ்சு தடதடவென்று அடித்துக் கொண்டது. இரண்டு பெரிய தொடை எலும்புகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டவன் என் கால்களைக் கண்டதும், ''இதோ, மாமிசத்துடன் ஒரு கால்... ஆஹா!'' என்று துள்ளிக் குதித்தான். அவனுக்கு ஒற்றைக் கண்தானே? சரியாகக் கவனிக்கவில்லை.

என் காலைப் பற்றி இழுத்துக் கொண்டே மேஜை யருகே போனான். அங்குள்ள மதுப் பீப்பாவை மடமடவென்று காலி செய்தான். பிறகு தொடை எலும்புகளைக் கடித்துச் சுவைத்தான். இதற்குள் மதுவின் போதை வேலை செய்யவே அப்படியே மேஜைமீது சாய்ந்தபடி குறட்டை விடலானான். இறந்த மனிதன் என்று என்னை இழுத்து வந்த அலங்கோலத்தில் என் கால் எலும்பு உடைந்து விட்டது. அந்தப் பெண் எனக்கு மருந்து வைத்துக் கட்டினாள்.

ராட்சதன் தூங்கிக் கொண்டிருக்கும் போதே ஒரு கனத்த இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அவன் ஒற்றைக் கண்ணுக்குள் செருகினேன். இதனால் அவனைக் கொல்ல முடியா விட்டாலும் அவன் கண்ணில் படாமல் தப்ப முடியுமல்லவா?

தீயினால் சுட்ட புண் திகுதிகுவென்று எரிய அவன் பயங்கரமாகக் கத்தியபடி என்னைத் தொடர்ந்து ஓடிவந்தான். கண் தெரியாததனால் என்னைப் பிடிக்க முடியவில்லை. ஒரு வளையத்தை என்மீது வீசினான். அது என் காலில் வந்து விழுந்தது. அப்படியே ஒட்டிக் கொண்டது. அது மந்திர வளையம் போலிருக்கிறது. ''நான் இங்கிருக்கிறேன், நான் இங்கிருக்கிறேன்'' என்ற ஒலம் எழுந்தது அதனிடமிருந்து. என் இருப்பிடத்தை இத்தனை துல்லியமாகக் காட்டிக் கொடுக்கிறதே என்று தவித்தேன். தாவினேன், ஓடினேன்! குரலின் திசை கேட்டு அரக்கன் என்னை நெருங்கிக் கொண்டிருந்தான். சட்டென்று நான் ஒரு காரியம் செய்தேன். என் கத்தியை எடுத்தேன். கால் சதையோடு வளையத்தை வெட்டினேன். சற்றுத் தொலைவில் அதல



பாதாளமான ஒரு மலைப் பள்ளம். அதில் வீசினேன், என் காலோடு அந்த மந்திர வளையத்தை. அந்த மந்திர வளையம் அங்கிருந்தபடி அதே போலக் கத்திக் கொண்டிருந்தது. அரக்கன் அந்த ஒலி வந்த குறி கேட்டு அந்த மலைப் பள்ளத்தில் போய் விழுந்தான். ஈட்டி போன்ற பாறைகள் நீட்டிக் கொண்டிருந்த அந்தப் பள்ளத்தாக்கில் அவன் உடல் குத்திச் சிதறிச் சின்னாபின்னமாகி மாண்டான். என் கால் ஊனமானது இதனால்தான்'' என்றான் பக்காத் திருடன்.

இத்தனை நேரமும் திருடனின் கதைகளைக் காலகண்டனின் அருகிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஒரு தொண்டு கிழவி, ''இந்தக் கிழவன் கூறிய இந்தக் கதை பொய்யே யல்ல. நிஜமாக நடந்ததுதான். ஏனென்றால் ராட்சதனின் அரண்மனையில் சமையல்காரியாக இருந்தவள் நான்தான். அன்று இவனால் காப்பாற்றப்பட்ட குழந்தை நீதான். உன் இடது கையில் சுண்டு விரல் இல்லாதிருப்பதும் இதனால்தான்'' என்றாள்.

காலகண்டன் கறுப்புத் திருடனைக் கட்டித் தழுவிக் கொண்டான். ''ஐயா! நான் உங்கள் எல்லோரையும் விடுதலை செய்வது மட்டுமல்ல. நீங்கள் எது விரும்பிக் கேட்டாலும் தருகிறேன். என் உயிரைக் காத்து வாழ்வளித்த உத்தமரல்லவா நீர்!'' என்றான்.

''உன்னுடைய பொற்சலங்கை பூட்டிய குதிரையைக் கொடு போதும்'' என்று அந்த மூன்று ராஜகுமாரர்களின் கதையைச் சுருக்கமாகக் கூறினான் பக்காத் திருடன்.

காலகண்டன் மகிழ்ச்சியோடு தன் அற்புதக் குதிரையை அவிழ்த்து வந்து ராஜகுமாரர்களிடம் ஒப்படைத்தான்.

ராஜ குமாரர்கள் குதிரையுடனும் கிழவனுடனும் தங்கள் நாட்டுக்குத் திரும்பினார்கள். இத்தனை காலமும் மூன்றாவது இளவரசனின் நிபந்தனைப்படி உயரமான உப்பரிகையின் மீது, சோள ரொட்டியும் தண்ணீரும் குடித்தபடி இவர்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த ராணி தூரத்தில் இளவரசர்கள் குதிரையோடு வருவதைக் கண்டு 'வீல்' என்று அலறியபடி உப்பரிகையிலிருந்து கீழே குதித்துத் தன் உயிரைப் போக்கிக் கொண்டாள்.

அப்புறம் என்ன?

மூன்று ராஜகுமாரர்களும் ஒற்றுமையுடன் சந்தோஷமாக நாட்டை ஆண்டு கொண்டிருந்தார்கள். கறுப்புத் திருடன் இங்கும் காலகண்டனின் நாட்டிலும் மாறி மாறி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

ஊரெல்லாம் மொட்டை!

—அழகி

மூடியூர் என்று ஓர் ஊர் இருந்தது. அங்கே ஒரு நாள் ஒரு சாமியார் வந்தார். ஊருக்குள் நுழைந்ததும் அவருக்கு ஒரே ஆச்சரியம். அந்த ஊரில் எல்லோரும் மொட்டைகள்! ஆண், பெண் பெரியவர், சிறியவர் அத்தனை பெரும் மொட்டைகளாக இருந்தார்கள்.

" 'முடியூரில்' மொட்டைகளா?" என்று நினைத்த சாமியார் ஒருவனைக் கூப்பிட்டு, "ஏனப்பா இங்கே உள்ள எல்லோருக்கும் தலை மொட்டையாக இருக்கிறது?" என்று கேட்டார்.

அவன் சொன்னான்: "அதை ஏன் சாமி கேட்கிறீர்கள்? மூக்கையா என்று ஒருவன் இருக்கிறான். அவன்தான் இந்த ஊரில் முதல் மொட்டையன். அவனை 'யாரும் 'மூக்கையா' என்று கூப்பிட மாட்டோம். 'மொட்டையா, மொட்டையா' என்றே கூப்பிடுவோம். அவனுக்குக் கோபம் பொறுக்க முடியாமல் சண்டைக்கு வருவான். முடியே முளைக்காத அவனை நாங்கள் வேறு எப்படி சாமி கூப்பிடுவோம்?"

"சரி, மேலே சொல்லு" என்றார் சாமியார்.

"ஒரு நாள் அவன் திடீரென்று எங்கேயோ போய் விட்டு மறுநாள் ஊருக்கு வந்தான். வந்ததிலிருந்து, அவனை யாராவது 'ஏ, மொட்டையா' என்றால், கூப்பிட்டவன் தலையை மூக்கையா தொட்டு விடுகிறான். அவ்வளவுதான். அவன் தலையும் மொட்டையாகி விடுகிறது. பிறகு முடி முளைப்பதே இல்லை. இப்படி ஊரில் முடி இருந்தவர்கள் பலர் மொட்டையாகிப் போய் விட்டார்கள். சிலர் ஊரை விட்டே ஓட்டம் பிடித்து விட்டார்கள், சாமி" என்றான் அந்த ஆள்.

சாமியார் திடுக்கிட்டார். ஏனென்றால் கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு மொட்டை மனிதன் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த அவரிடம் வந்து வணங்கினான். அவன், அடுத்தவன் தலையைத் தொட்டால் மொட்டையாகும்படி அவரிடம் வரம் கேட்டு வாங்கிச் சென்றான். அவன் மூக்கையாகவாகத்தான் இருக்கும் என்று அவர் யூகித்தார்.

அவனை நல்வழிப்படுத்துவது தம் கடமை என்று அவனை அழைத்து வரச் சொன்னார்.

"மூக்கையா, நீ இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார் சாமியார்.

மூக்கையா, "சாமி! என்னை அவர்கள், 'மொட்டையா, மொட்டையா' என்று கூப்பிடும்போது எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று அவர்களுக்குத் தெரிய வேண்டாமா? அதுதான் தங்களிடம் இப்படி ஒரு வரம் வாங்கி வந்தேன்" என்றான்.


"நீ இப்படிக் கொடுமை செய்வாய் என்று நான் நினைக்கவில்லை. நீ வைத்தியத் தொழில் செய்பவன் என்றும், தலையில் புண் வந்தவர்களுக்கு வைத்தியம் செய்ய அந்த வரம் உதவும் என்றும் சொல்லி அல்லவா அதைப் பெற்று வந்தாய்?" என்றார் சாமியார்.


"போங்க சாமி, போங்க. என் கவலை எனக்கு. உங்களுக்கு என்ன?" என்றான் மொட்டையன்.


சாமியாருக்குக் கோபம் வந்து விட்டது. "ஏ, மொட்டையா, நீ செய்தது பாவம்" என்று கூச்சல் போட்டார்.

"மொட்டையா!" என்று சாமியார் சொன்னதும் மூக்கையனுக்குக் கோபம் கட்டுக் கடங்காமல் வந்து விட்டது. முனிவர் என்றும் பார்க்காமல் ஓடிவந்து சாமியார் தலையைத் தொட்டுவிட்டான். அடுத்த நொடியிலேயே சாமியார் மொட்டையாகிப் போய் நின்றார்! அவர் சடை, முடி, தாடி எதுவுமே இல்லை.

தகுதி இல்லாதவனுக்கு வரம் அளித்ததற்குத் தாம் அவமானப் பட்டது சரிதான் என்று உணர்ந்தார் சாமியார். மேலும் கோபமடையாமல், 'நடந்த எல்லாத் தவறுகளையும் நீக்க என்ன செய்யலாம்?' என்று சிந்தித்தபடி காட்டை நோக்கி விரைந்து சென்றார்.




ஜெய் ஹனுமான்
கதை: ரா.கணபதி
சித்திரம் : விஜய
8
கிஷ்கிந்தையின் மன்னனான வாலி ஒப்பற்ற வீரனாக விளங்கினான். ஒரு சமயம் எருமை உருக்கொண்ட துந்துபி என்ற அரக்கன் வாலியை எதிர்த்தான்.
என்னிடமா உன் பலத்தைக் காட்டுகிறாய்? இதோ பார்...
துந்துபியின் கொம்புகளைப் பிடித்துத் தூக்கிச் சுழற்றி அவன் உடலைத் தரையில் மோதி அடித்துக் கொல்கிறான் வாலி
துந்துபியின் மலை போன்ற உடலை வாலி ஒரு காலால் எற்றி உதைக்கிறான். அது எண்பது மைல்களுக்கப்பால், போய் விழுகிறது.
துந்துபியைத் தரையில் அறைந்து கொன்றபோது அவன் உடலிலிருந்து பீறிட்டுச் சிதறிய ரத்தம் அருகிலுள்ள ரிஷ்யமுக மலையில் வசித்த மதங்க முனிவரின் ஆசிரமத்திலும் விழுகிறது. அதனால் கோபமுற்ற முனிவர்...
என் ஆசிரமத்தை மாசு படுத்திய வாலி இப்பிரதேசத்திற்குள் வருவானானால் அவன் தலை வெடித்து மாள்வானாக
கிஷ்கிந்தையில் இப்படி வாலி ஆட்சி புரிந்த அதே சமயம் இலங்கையில் ராவணேசுவரனின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.
தேவலோகத்தை வென்று விட்டேன் பூலோகத்திலோ என்னை எதிர்ப்பவர்கள் யாருமில்லை


கிஷ்கிந்தையின் மன்னனாம். வாலி என்று பெயராம். எவராலும் கொல்ல முடியாத வீரனாம் - சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
அப்படியா? அதையும் பார்த்துவிடலாமே...
ஒவ்வொரு நாளும் வாலி பூமியைச் சூழ்ந்துள்ள நான்கு கடல்களுக்கும் தாவிச்சென்று தனது நித்திய கர்மாக்களை முடிப்பான். ஒரு நாள்.....
தென் கடலில் சந்தியா வந்தனம் செய்து கொண்டிருந்தபோது ராவணன் அங்கு வருகிறான்.
இந்திர குமாரனை இவன் முன்னால் போனால் இவன் கழுத்திலுள்ள மாலையின் சக்தியினால் என் பலத்தில் பாதி அவனுக்குப் போய் விடும். ஆகவே பின்னாலிருந்த படியே....
இலங்கை அரசனை அந்தப் பத்துத்தலைப் பூச்சி என்னைப் பிடிக்க வருகிறதோ? வரட்டும்....
எட்டிப் பிடிக்கும் தூரத்துக்கு ராவணன் வந்ததும்
வெற்றியினால் அகந்தை கொண்ட ராவணன் நீ தானேடா?...
ராவணனைப் பிடித்த வாலி, அவனைத் தன் கமுக்கட்டில் இடுக்கிக் கொண்டு ஒரு நெரி நெரித்தான். ராவணனின் உயிர் துடித்தது. எலும்புகள் நொறுங்கின. விழி பிதுங்கியது.
தொடரும்

வெறி நாய்



மனிதனின் உற்ற தோழனாக நாயைக் கூறுவார்கள். இருந்தாலும் சில சமயங்களில் தோழமைக்கு இலக்கணமாக உள்ள இந்தப் பிராணிகளின் கடியினால் மனிதனுக்கு மரணமும் விளைகிறது. குணம் மாறுகிறது என்பது இதற்கான காரணமல்ல. ஒரு வகைக் கொடிய நோயினால் நாய்கள் பாதிக்கப்படுவதே காரணம். இந்த நோய்க்கு ராபீஸ் (Rabies) என்று பெயர். இந்நோயினால் தாக்கப்பட்டவர்களின் மூளையும் தண்டுவடமும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. வாழ்வதற்கு, அவசியமான அவயவங்களல்லவா இவை இரண்டும்? ராபீஸ் நோய் ஒரு வகை விஷக் கிருமிகளால் (வைரஸ்) பரவுகிறது. இந்தக் கிருமிகளைச் சாதாரண சூட்சும தரிசினியினால் கூடக் (மைக்ராஸ்கோப்) காண முடியாது. அத்தனை நுண்ணியவை.

ராபீஸ் என்னும் இவ்வகை நோய் சூடான ரத்தம் உடைய எல்லாவித ஜீவராசிகளையும் தாக்கக் கூடியது. ஆனால் மனிதனோடு நாய் மட்டுமே மிக நெருங்கிப் பழகுகிறது. அதனால்தான் இந்த நோய்க்கும் நாய்க்கும் அதிகத் தொடர்பு.

ராபீஸ் நோயினால் ஒரு நாய் தாக்கப்படுமானால் அதன் அறிகுறிகள் என்ன? நாய் சோர்ந்து சோம்பிக் கிடக்கும் காய்ச்சல் இருக்கும். உணவு உட்கொள்ளாது. பிறகு அமைதியில்லாமல் பரபரப்படைந்து காணப்படும். வாயில் உமிழ் நீர் வழிய ஆரம்பிக்கும். ஊளையிடும், குரைக்கும், வெறிகொண்டு துடிக்கும். இந்த அறிகுறிகள் ஒரு நாய்க்கு ஏற்படுமானால் அதன் வாழ்வு நாலைந்து தினங்களில் முடிந்துவிடும். இந்தக் காலங்களில் இதன் வாயிலிருந்து வழியும் உமிழ்நீரில் நோய்க் கிருமிகள் ஏராளமாக இருக்கும். இப்போது இது யாரையாவது கடித்தால் அதன் வழியே அவர்களுக்கும் அந்த நோய் தொற்றிக் கொள்ளும். அதனால் தான் நாய் கடித்த உடன் டாக்டரிடம் போக வேண்டும் என்கிறார்கள். நாய் கடித்த மூன்று நாட்களுக்குள் முறிவு மருந்தை உடலில் செலுத்த வேண்டும். நாய்க் கடியினால் ராபீஸ் நோய் பரவுமுன் அதைத் தடுத்து நிறுத்த ஓர் ஊசி மருந்தைக் கண்டவர் லூயி பாஸ்சர்.

□□□ தெரிஞ்சுக்கோ □□□ தெரிஞ்சுக்கோ □□□ தெரிஞ்சுக்கோ □□□

வைரம் தோன்றுவது எப்படி ?

மனிதனால் அறியப்பட்ட மிக உறுதியான ஒரு பொருள் வைரம்தான். இத்தனை உறுதி வாய்ந்த வைரம் எப்படி உருவாகிறது? அழுத்தத்தினால்.

விஞ்ஞானிகளின் முடிவுப்படி, 100,000,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு பொருள்தான் இன்றைய வைரம்! அப்போது இன்றையபூமிக்கு அடியிலே சூடான இளகிய நிலையில் மலைகள் இருந்தன. பூமி கொஞ்சம் கொஞ்சமாகக் குளிர்ந்து கொண்டு வந்த போது அதன் மீது அதிகமான அழுத்தம் ஏற்பட்டது. உஷ்ணமும் அழுத்தமும் இளகிய நிலையில் உள்ள பாறையில் ஒரு வகை ரசாயன மாற்றத்தை உண்டாக்கின. கரிப்பொருள் மிக உயர்ந்த ஸ்படிக நிலைக்கு உருமாற்றம் பெற்றது. இதையே நாம் - டைமண்டு - வைரம் என்கிறோம். வைரத்தின் இரு தனிப்பெரும் குணங்கள் — அதன் உறுதியும் ஜ்வலிப்பும்தான்.

வைரங்களை எல்லாராலும் சுலபமாக உடைக்க முடியாது. இதற்கு மிகத் திறமை வேண்டும். வைரத்தில் இயற்கையாகவே சில நீரோட்டங்கள் (கோடுகள்) காணப்படும். அதைக் கண்டறிந்து இன்னொரு வைரத்தின் கூரான முனையினால் அந்தப் பாதையில் சிறு வெட்டு வாயை உண்டாக்குவார்கள். இந்த வெட்டு வாயில் எஃகு முனையை வைத்துக் கொஞ்சமும் நலுங்காமல் பலமான ஒரு தாக்குதல் தருவார்கள். எல்லாம் முறைப்படி ஒழுங்காக இருக்குமானால் உலகின் மிக மிக உறுதியான பொருளான வைரம் எதிர்பார்த்தபடி பல பாகங்களாகப் பிளக்கப்படும்.


வைரத்துக்கு ஜ்வலிப்பு ஏற்படுவது எப்படி ? அதில் பல முகங்களை யந்திரத்தின் மூலம் பட்டை தீட்டுவதினால்தான். மிக வேகமாகச் சுழலும் ஒரு யந்திரம். அதன் சக்கரங்களில் வைரத் துகள்கள் பதிக்கப்பட்டிருக்கும். இதில் ஒரு வகை எண்ணெய் எப்போதும் வழிந்து கொண்டிருக்கும். பட்டை தீட்ட வேண்டிய வைரத்தை இதில் உரசி முகங்களை உருவாக்குவார்கள். வைரத்தை வெட்டவோ பட்டை தீட்டவோ இன்னொரு வைரத்தினால்தான் முடியும்.



நாக்கும் சுவையும்

நம் உடலில் உள்ள அற்புதமான அவயவங்களில் ஒன்று நாக்கு. ஒரு முனையில் மட்டும் உடலோடு இணைக்கப்பட்டுள்ள தசை நாக்கு ஒன்றுதான். மற்றத் தசைகளைப் போலல்லாமல் இதனால் தன்னிச்சையாக இயங்க முடியும்.

நீ பேசுகிறாய். விதம் விதமான ஒலிகளை எழுப்புகிறாய். இதெல்லாம் எப்படி ஏற்படுகின்றன? நாக்கு நீ பேசும்போது பலவிதமாகப் புரண்டும், நீண்டும் சுருங்கியும் செயல்படுவதினால்தான்.




நாக்கை மூடியுள்ள முகோஸ் (Mucous) என்ற ஜவ்வு உணவை ஏற்று, இருத்தி, அரைக்கும் பணியைத் திறம்படச் செய்ய உதவுகிறது. உண்மையில் நாக்கின் பரப்பு ஒரு தட்டைப் போல், தூளாக்கும் கருவியைப் போல், மாவு பிசையும் யந்திரத்தைப் போல், பொருள்களைக் கூட்டிக் குவிக்கும் ஒரு பிரஷ்ஷைப் போல் இப்படி எல்லாச் சாதனங்களும் ஒருங்கமைந்த ஓர் அவயவமாக விளங்குகிறது.

உய்த்து உணரும் புலன்களோடு தொடர்புடைய மிக நளினமான அவயவங்களுள் நாக்கும் ஒன்று. நாம் சாப்பிடுவது, அருந்துவது என்ன என்பதையும், அது வாயில் எத்தகைய மாற்றங்களை அடைகின்றன என்பதையும் தொடர்ந்து மத்திய நரம்பு மண்டலத்துக்குச் (மூளை) செய்தி அனுப்பிக் கொண்டே இருக்கிறது. இது மட்டுமா? ருசியை உணரும் கருவிகள் மொட்டுக்களாக நம் நாக்கின் பரப்பில் இடம் பெற்றிருக்கின்றன. சொரசொரப்பான இப்பகுதிகளுக்கு பாப்பிலா (Papilla) என்று பெயர். ருசி காணும் மொட்டுக்கள் இந்தப் பாப்பிலாக்களின் சுவர்களில்தான் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு மனிதனின் நாக்கில் சுவை அறியும் மொட்டுக்கள் மூவாயிரம் உள்ளன. நாக்கின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகை ருசியை அறியும் ஆற்றல் பெற்றது. அடி நாக்கு கசப்பையும், நுனி நாக்கு இனிப்பையும், பக்கங்கள் புளிப்பு, கரிப்புக்களையும் உணரக் கூடியவை.

வெளவாலும் பல்லும்

இரவில் இரை தேடி வாழும் இனத்தைச் சேர்ந்த வெளவாலில் 2000 வகைகளுக்கு மேல் இருக்கின்றன. அவைகளின் இறக்கைகள் விரிந்த நிலையில், ஆறு அங்குல நீளத்திலிருந்து ஆறு அடிகள் நீளம் வரையிலும் காணப்படுகின்றன. அநேகமாகப் பூச்சிகள்தான் இதன் உணவு. உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் வெளவால்கள் பழங்களையே ஆகாரமாகக் கொள்ளுகின்றன. இவைகளுக்குப் பழம் தின்னி வெளவால் என்றே பெயர். புஷ்பங்களின் மகரந்தத்தையும் தேனையும் உண்டு வாழ்கின்றன சில வெளவால்கள். சில, மீனைக்கூடச் சாப்பிடும். சிறு வெளவால்களை உணவாகக் கொள்ளும் பெரிய வெளவால்களும் உண்டு. ரத்தம் குடிக்கும் வெளவால்கள் பயங்கரமானவை. இவைகளுக்கு 'வாம்பயர்' என்று பெயர். நம் பாரதத்தில் பல்வேறு வகை வெளவால்கள் வாழ்கின்றன. பழங்களிலிருந்து சாற்றைப் பிழிந்து உறிஞ்ச ஏற்ற வகையில் வெளவால்களுக்கு அகலமான சமதளமான பற்கள் உண்டு. மகரந்தம் தேன் இவைகளை உண்ணும் வெளவால்களுக்கு நீண்ட நாக்கும் உண்டு.



ரத்தம் குடிக்கும் வெளவால்களுக்கு மேல் தாடையில் நீண்ட வெட்டும் பற்கள் இரண்டு உண்டு. குதிரைகள், ஆடு மாடுகள், நாய்கள், கோழிக் குஞ்சுகள், மனிதர் ஆகியவற்றின் உடலில் இந்த முன் பற்களால் கடித்துத் துவாரம் உண்டாக்கும். அந்த வெட்டு வாயிலிருந்து பெருகும் ரத்தத்தை வெளவால்கள் உறிஞ்சியோ நக்கியோ குடிக்கும்.

வெளவால்கள் எல்லாவற்றுக்குமே இருபதிலிருந்து முப்பத்தெட்டு வரை பற்கள் உண்டு. பூச்சிகளைத் தின்னும் வகைக்கு முப்பத்தெட்டு பற்கள் வரை இருக்கும். ஆகவே, வெளவாலுக்குப் பற்கள் ரொம்ப அவசியம் என்று தெரிகிறது. உலகில் ஆதி காலத்திலிருந்து இன்று வரையும் காணப்படும் ஒரு பிராணி இனம் இந்த வெளவால்கள்.

ரமேஷுக்கு ஒரு பேனா



க. முத்துசாமி

புத்தம் புதுப் பேனா. அன்றுதான் வந்த பேனா. வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான், ரமேஷ்.

'எவ்வளவு அழகான பேனா!'

ஆசிரியர் நல்லசிவம் மேஜையின் மீது வைத்திருந்த பேனாவைப் பார்த்து எண்ணியெண்ணி வியந்தான் ரமேஷ்.

அப்படி ஓர் அழகான பேனாவை அவன் பார்த்ததில்லைதான். அவன் கைக்கு வந்ததெல்லாம் ஒரு ரூபாய், இல்லாவிட்டால் ஒன்றரை ரூபாய் மதிப்புள்ள பேனாதான்.

அவனும் அவன் அம்மாவை எத்தனையோ தடவை கேட்டுப் பார்த்து விட்டான்.

''அம்மா, அம்மா.... தங்க மூடி போட்ட பேனா வேணும்மா..இங்கியைத் தானே உறிஞ்சுமே அந்த மாதிரி...''

'' ரமேஷ்! நல்லாப் படி. மேல் கிளாசுக்கு நீ வந்தவுடனே உனக்கு நல்ல பேனாவா வாங்கித் தர்றேன்....''

''என்ன அப்படிப் பெரிய மேல் கிளாசுக்கு நான் வரணும்? எங்க வாத்தியார்தான் சொன்னாரே, என்னிக்கு நீங்க தரையிலேயிருந்து பெஞ்சுக்குப் போறீங்களோ...அன்னிக்கே நீங்க மேல் கிளாஸ்'ன்னு .... இருக்கிறதிலேயே பெரிய பெஞ்சிலே வேறே நான் உட்கார்ந்திருக்கேன்.... இன்னும் எனக்குப் பேனாதான் வந்த பாடு இல்லே...ஏழாம் வகுப்பைவிட இன்னும் என்ன மேல் கிளாஸ் வேணும்...?'' இப்படிக் குறைப் பட்டுக் கொண்டவன்தான் ரமேஷ்.

அந்தப் பேனாவில்தான் அவனுடைய முழுக் கவனமும் நிலைத்திருந்தது. அவன் கேட்டது தங்க மூடி மட்டும் உள்ள பேனா. ஆனால் இந்தப் பேனாவோ முழுவதும் தங்க நிறம்.... என்ன ஜொலிப்பு...? ஆகா...!

ஆசை — அதிலும் பேராசைக்கு நியாயம் ஏது? அந்நியர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்னும் பகுத்தறிவு இன்னும் முழுமை பெறாத மனம். 'எப்படியும் அடைந்துவிட வேண்டும்' என்ற ஆவல்களாலே உருவான மனக் கோட்டை ரமேஷினுடையது.

'ஆசிரியர் நல்லசிவம் அயரும்போது 'எடுத்து விடுவோம் சரி... அப்புறம் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வர முடியாதே. வீட்டில்தான் வைத்துக் கொண்டு எழுத முடியும்.... அம்மா பார்த்துவிட்டு 'ஏதடா' என்று கேட்டால்.? பத்திரமாகப் பெட்டியில் வைத்துவிடுவோம்....'

ரமேஷின் சிந்தனை நீண்டு கொண்டேயிருந்தது.

எல்லாப் பையன்களும் கட்டுரை எழுதுவதில் மும்முரமாக இருந்தார்கள். இன்னும் இரண்டு நிமிடங்களோ மூன்று நிமிடங்களோதான் மணி அடிக்க...

அந்த நேரம் பார்த்து ஆசிரியர், ''எல்லாரும் அமைதியாக எழுதிக் கொண்டிருங்கள். இதோ வந்திடறேன்'' என்று கூறிவிட்டு வகுப்பை விட்டுப் புறப்பட்டார்.

அந்தப் பேனா மேஜை மீது அப்படியே இருந்தது.

யாரும் கவனிக்கவில்லை. ரமேஷ் மேஜையருகே நோட்டு வைக்கப்போகும் சாக்கில் பேனாவை எடுத்து உடனே பத்திரப்படுத்திக் கொண்டான்.

பள்ளி மணியும் அடித்துவிட்டது. 'கசமுச' என்ற ஒலி. எல்லோரும் புத்தக மூட்டையைத் தூக்கிக் கொண்டு பகல் சாப்பாட்டுக்காக ஒருவரைஒருவர் முந்திக் கொண்டு ஓடினார்கள்.

ரமேஷுக்கு ஏதோ ஒரு வகையில் திருப்தி. இன்னொரு புறம் பயம் நெஞ்சைக் கவ்வியது. ஆசிரியர் நல்லசிவம் பேனாத் திருட்டைக் கண்டு பிடித்துவிட்டால்...? பள்ளிப் படிப்பு, நண்பர்களின் நட்பு, அம்மாவின் கௌரவம், இந்த மகிழ்ச்சி.....

கசப்பான சிந்தனைகள் நீண்டு கொண்டே சென்றன. இவ்வளவு பயத்துக்கும் காரணம் தன்னுடைய தவறுதான் என்பது அவனுக்குப் புரிந்தது. இனி என்ன செய்ய...? காரியத்தைத்தான் முடித்துவிட்டானே....

இடைவேளைக்குப் பின். முதல் பீரியட் சரித்திரம். ஒரு வழியாக நேரம் நகர்ந்து விட்டது.

இரண்டாவது பீரியட். தமிழ் ஆசிரியர் நல்லசிவம் வகுப்பு அது.

ரமேஷுக்கு மறுபடியும் பயம் வந்து விட்டது. மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. என்ன ஆகப் போகிறதோ என்று எண்ணிக் கொண்டிருந்தான் ரமேஷ்.

நல்லசிவம் அமைதியாக வகுப்பறைக்குள் நுழைந்து வழக்கம்போல் அமர்ந்தார். அவர் நல்லவர்; அதே நேரத்தில் கண்டிப்பும் மிக்கவர். அதனால்தான் ரமேஷ் அப்படிப் பயந்தான்.

வகுப்பு மாணவர்களை ஒருகணம் அமைதியோடு பார்த்தார்.

எந்தப் பரபரப்பும் இல்லாமல், ''தம்பிகளா, இங்கே காலையிலே மேஜை மேலே ஒரு பேனு வைச்சிருந்தேன், யாராவது பார்த்தீங்களா?'' என்றார்,

ஒருத்தரும் பதில் பேசவில்லை.

''பசங்களா! அது பெங்களூரிலேஇருக்கிற நம்ம ரமேஷ்ன் மாமா கொடுத்த பேனு. அவன்கிட்டே கொடுக்கச் சொல்லிக் கொடுத்தார். நான் போன வாரம் போயிருந்தேனில்லையா, அப்போ. 'நல்லாயிருக்கே, எழுதிப் பார்த்துட்டு ரமேஷ்கிட்டே கொடுக்கலாம்'னு வைச்சிருந்தேன். அதைத்தான் இப்போ காணோம்....''

ரமேஷ் அவனுடைய இடத்திலிருந்து எழுந்து மேஜையருகே ஓடினான். அவன் என்ன வஞ்சகத்தின் விளைநிலமா என்ன? அறியாமல் அடுத்தவர் வீட்டுப் பயிரில் வாய் வைக்கும் பசுதானே அவ'ன் ?

ரமேஷின் கண்களில் நீர் தளும்பிவிட்டது. ''ஐயா.. நான்தானையா அதை எடுத்தவன்....!''


நல்லசிவம் ஆழ்ந்த சிந்தனைத் திறன் உடையவர். ரமேஷையும் திருடனாக்கி வகுப்பில் அறிவுரை என்ற பெயரில் சொற்பொழிவு நிகழ்த்தி எல்லோருக்கும் அதைத் தெரியப்படுத்துவானேன்?

அவன் முதுகை அன்புடன் தட்டிக் கொடுத்தார்! ''அப்படியாடா, ரமேஷ்! உனக்குச் சேர வேண்டியதைக் கண்டுபிடிச்சஎடுத்துக்கிட்டியா. ரொம்ப மகிழ்ச்சிடா ரமேஷ்....!'' என்றார்.

வகுப்பு முடிந்ததும் ரமேஷைத் தனியே அழைத்து, ''ரமேஷ், உனக்கு நியாயமாகச் சேர வேண்டியது உன்னை வந்து அடைந்தே தீரும். அதற்காகத் தவறான வழியில் செல்லக்கூடாது.

''உன்னுடைய பேனவை நீ எடுத்துக்கிட்டிருந்தாலும், அது உன்னுடையது என்பது தெரியாத வரைக்கும் உன் மனம் எவ்வளவு தொல்லையடைஞ்சிருக்கும். ஆசை நல்ல ஆசையா மட்டும் இருந்தால் போதாது. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள நீ போகிற பாதையும் ஒழுங்கா இருக்கணும்...?''

''என்னை மன்னிச்சிடுங்க ஐயா! இனிமே இது மாதிரி நடந்துக்கமாட்டேன்.....'' என்றான் அவன். கௌரவத்தைப் பெரிசா நினைக்கிற அவன் மாமா கொடுத்த பரிசை அவனும் கௌரவமாகக் குற்றத்தை ஒப்புக் கொண்டு பெற்றது மனத்துக்குச் சாந்தி தந்தது.



மூளைக்கு வேலை

கிட்டுவும் ஆப்பிள்களும்


☐ கிட்டுவின் நண்பர்களெல்லாம் அவன் வீட்டில் கூடி இருந்தார்கள். அன்று அவனுடைய பிறந்த நாள். கிட்டு படுசுட்டிப் பயல். படிப்பில் கெட்டிக்காரன். பிறந்த நாள் விருந்துக்குப் பிறகு கூடத்தில் எல்லோரும் கூடி யிருந்தார்கள். கிட்டுவின் அப்பா ஒரு பெட்டி நிறைய ஆப்பிள் வாங்கி வந்திருந்தார், மகனின் பிறந்த நாள் பரிசாக. அவனுக்கு அது பதினாறாவது வயது. ஆகவே பதினாறு ஆப்பிள்கள் வாங்கிப் பரிசளித்திருந்தார். அந்த ஆப்பிள்களைத் தன் நண்பர்களோடு பகிர்ந்து உண்ணுவதற்கு முன் வேடிக்கையாக ஒரு கணக்குப் போட நினைத்தான் கிட்டு.

1, 2, 3 என்று பதினைந்து வரை ஒரு காகிதத்தில் எழுதினான். ஒரு காகிதத்தில் '0' என்று பூஜ்யத்தையும் வரைந்தான். அந்தக் காகிதங்களை ஆப்பிள்களின் மீது ஒட்டினான். பிறகு ஆப்பிள்களை மேஜை மீது இங்குள்ளபடி வரிசையாக அடுக்கினான். தன் நண்பர்களைப் பார்த்து, ''ஒரு சின்ன விளையாட்டு. இங்குள்ள ஆப்பிள்களில் பத்து ஆப்பிள்களை மட்டுமே இடம் மாற்றி அமைப்பதின் மூலம் இதில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை பத்துவிதமாகக் கூட்டிய போதும் (மேலிருந்து கீழாக நான்கு வரிசை, இடமிருந்து வலமாக நான்கு வரிசை மூலைக்குமூலை இரு வரிசை) கூட்டுத் தொகையாக முப்பதுதான் வர வேண்டும். யார் கண்டு பிடிக்கிறார்களோ அவர்களுக்கு இங்குள்ள ஆப்பிள்களில் பாதி பரிசாகக் கிடைக்கும்'' என்றான். ஆப்பிள் ஆசையில் எல்லோரும் பரபரப்புடன் முயன்றார்கள். ஆனால்.... உங்களால் முடிகிறதா, பாருங்கள்.




கோயிலும் குளமும்

☐ ஸ்ரீரங்கம் கோயிலுக்குப் போயிருக்கிறீர்களா? ஸ்ரீரங்கம் நகரம் ஒரு தீவு போல. காவிரியும் கொள்ளிடமும், அரங்கன் துயிலும் இடத்தை மாலை போல இரு பக்கமும் பிரிந்து சென்று மறுபடியும் கூடுகின்றன. அதே மாதிரி ஓர் ஊரில் இரு நதிகளுக்கு இடையே ஒரு பிரபலமான கோயில் இருந்தது. அவ்விரு நதிகளும் கோயிலின் இரு பக்கமும் பிரிந்து ஒதுங்கிப் போனாலும் அவ்விரு நதிகளையும் ஒரு பெரிய வாய்க்கால் இடையில் இணைத்தது. இந்த நதிகளிலும் வாய்க்காலிலும் மொத்தம் எட்டு பாலங்கள் இருந்தன. நதிக்கு வலப் பக்கத்தில் ஒரு புஷ்கரணி உண்டு. ரொம்பவும் புனிதமானது. அந்தப் பக்கத்தில் ஒரு நம்பிக்கை. அந்தப் புஷ்கரணியில் குளித்துவிட்டு நதியில் கால் படாமல் அதன் எட்டுப் பாலங்களையும் ஒன்று விடாமல் கடந்து கோயிலுக்கு வந்து ஆண்டவனைத் தரிசித்தால் நினைத்ததெல்லாம் கைகூடுமாம். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரு பாலத்தை ஒரு தடவை தான் கடக்கலாம். நதியில் படகில் போகக் கூடாது. கால் நடையாகவேதான் புஷ்கரணியிலிருந்து கோயிலுக்குப் போக வேண்டும். உண்மையான பக்தியும் நம்பிக்கையையும் கொண்டவர்களால் தான் இந்த நிபந்தனைப்படி அந்த ஆண்டவனைக் காண முடியுமாம். உங்களுக்கு உண்மையான பக்தி இருக்குமானால் அந்த ஆண்டவனின் தரிசனம் கட்டாயம் கிடைக்கும்.




விடைகள்:



மேலே இலையுள்ள ஆறு ஆப்பிள்களும் நகர்த்தப் படாதவை..... மற்றவை இடம் மாறி உள்ளன.

கீழே காட்டியுள்ள ஒரே வழிதான். அந்த நதியின் உற்பத்தி ஸ்தானம் அருகே தான். இருந்தது. அதைச் சுற்றிக் கொண்டு மறுபக்கம் போனான் ஒரு பக்தன். அதன் பிறகு நிபந்தனைப் படி அவன் சென்ற வழி குறிக்கப்பட்டுள்ளது.



வருங்கால விளையாட்டு வல்லுநர்களை உருவாக்குவது எப்படி?

லெனின் கிராடில் உள்ள ஒரு தனிப் பயிற்சிப் பள்ளியில் முப்பது இளம் விளையாட்டு மாஸ்டர்களும், நாற்பத்தி ஏழு மாஸ்டர் கேண்டிடேட்டுகளும், தொண்ணூற்றொரு விளையாட்டு வீரர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இது ஒரு போர்டிங் பள்ளி.

1971ல் செக்கோஸ்லோவாக்கியாவில் நடைபெற்ற 'மைனர் ஒலிம்பிக்' விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற, பதினைந்து வயதான **ஜானு கிம்மெல் பார்ஃப்** என்பவரும், பதினெட்டு வயதுக்குள்ளானவர்களுக்கான சோவியத் நாட்டு உடற் பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற்ற **கால்யா கிரியாபினு** என்பவரும் இப்பள்ளியின் ஒன்பதாவது வகுப்பு மாணவியர் ஆவர்.

இப்பள்ளி விளையாட்டுத் துறையில் விசேஷப் பயிற்சி அளிக்கிறது. லெனின் கிராடு மற்றும் இதர நகரங்களிலிருந்து இங்கு 470 மாணவ, மாணவிகள் தங்கிப் பயில்கின்றனர்.

இப்பள்ளியில் விசாலமான விளையாட்டு மைதானங்களும், நீச்சல் குளங்களும், பனிச் சறுக்கு மைதானங்களும், விளையாட்டுப் பயிற்சிக்கான சாதனங்களும் நூல் நிலையங்களும், வாசிப்புக் கூடங்களும் உள்ளன. இங்கு படிக்கும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், அடிக்கடி டாக்டர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இங்கு கல்வி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது. மாணவர்களின் செலவுகள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது.

இப்பள்ளியில் பயிற்சி தருவதற்கு ஐம்பத்தி மூன்று பயிற்சியாளர்களும், இருபது ஆசிரியர்களும், இருபத்தொரு உதவி ஆசிரியர்களும் வேலை செய்கின்றனர். இங்கு மாணவர்கள், தங்கள் இதர பாடங்களைப் பாதிக்காதவண்ணம் விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்வது குறிப்பிடத் தக்கது.

நன்றி: **சோவியத் செய்தித் தகவல் நிறுவனம்**

வலப் பக்கம்: வருங்கால விளையாட்டு வீராங்கனைகள்.

கீழே - இடது : விளையாட்டுப் பயிற்சிபெறும் மாணவர் மாணவிகளுக்கான பௌதிக வகுப்பு.

வலது : விளையாட்டுப் பயிற்சி தரும் போர்டிங் பள்ளி மாணவ மாணவிகள்.







கண்டு பிடியுங்கள்

ஈ. க.

ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஐந்தில் ஒன்று மற்றதினின்று மாறுபட்டது. எது? ஏன்?

லட்டு—ஜிலேபி—பஜ்ஜி—குலோப்ஜான்—கேசரி. (பஜ்ஜி—காரம்).

வினா?

1. கோதாவரி — காவேரி — துங்கபத்திரா — தபதி — நர்மதை.

2. பாபர் — இப்ராஹிம் லோடி — ஷாஜஹான் — பகதூர்ஷா — அக்பர்

3. கல்கி — ஆனந்தவிகடன்-குமுதம்-தினமணி கதிர் — துக்ளக்.

4. பாகிஸ்தான் — நேபாளம் — இலங்கை — பங்களா தேஷ்—ஆப்கானிஸ்தான்.

5. கருணாநிதி — நாயக் — சேதி — உமாசங்கர் தீட்சித்—அச்சுதமேனன்.

6. திருவண்ணாமலை — காளஹஸ்தி திருவானைக்கா—சிதம்பரம்—திருவாரூர்.

7. ஈரோடு — சேலம் — திருச்சி — திருப்பூர் — பேரளம்.

8. மதுக்கரை — நெல்லிக்குப்பம் — ஆலங்குளம் — சங்ககிரி — தாழையூத்து.

9. சித்திரை — மாசி — ஆவணி—ஆனி—தை.

10. ஹமாம் — லக்ஸ் — சிந்தால் — சன்லைட் — சந்திரிகா.

11. கென்னடி — சர்ச்சில் — லிங்கன்-ரூஸ்வெல்ட் — ட்ரூமன்.

12. நெல் — துவரை — கோதுமை — ராகி — சோளம்.

13. செங்கல்பட்டு, திருநெல்வேலி—சேலம் — கன்னியாகுமரி — தஞ்சை.

14. ஒட்டகம் — காட்டெருமை — ஆடு — வரிக் குதிரை — மான்.

15. அலகாபாத்—பெங்களூர்-பாட்னா திருவனந்தபுரம் — ஹைதராபாத்.

16. கிரிக்கெட் — வாலிபால்—புட்பால் — கபடி — பூப்பந்தாட்டம்.

17. தங்கம் — பித்தளை — பிளாட்டினம் — பாதரஸம் — இரும்பு.

18. கொலம்பியா — வெனிசுலா உகாண்டா — பொலீவியா — சிலி.

19. இங்கிலாந்து — ஸ்வீடன் — ஸ்விட்சர்லாந்து — ஹாலந்து — லக்சம்பர்க்.

விடை

1. துங்கபத்திரா உபநதி.

2. இப்ராஹிம்லோடி முகலாய வம்சமில்லை.

3. துக்ளக் மாதமிருமுறை — மற்றவை வாரப் பத்திரிகைகள்.

4. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடல் உள்ளது.

5. உமாசங்கர் தீட்சித் மத்திய மந்திரி. மற்றவர்கள் ராஜ்ய முதல்வர்கள்.

6. திருவாரூர் - பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றல்ல.

7. திருப்பூர் — ரயில்வே ஸ்டேஷன் — மற்றவை ஜங்ஷன்கள்.

8. நெல்லிக்குப்பம் — அங்கு சர்க்கரை ஆலை. மற்றவிடங்களில் சிமெண்டு ஆலை.

9. ஆவணி — தட்சிணாயனத்தைச் சார்ந்தது. மற்ற மாதங்களில் உத்திராயணம்.

10. சன்லைட் — வாஷிங் சோப். மற்றவை வாசனை சோப்புக்கள்.

11. சர்ச்சில் — பிரிட்டிஷ் பிரதம மந்திரி. மற்றவர்கள் அமெரிக்க ஜனாதிபதிகள்.

12. துவரை — இரட்டைப் பருப்பு. மற்றவை ஒற்றை.

13. சேலம்—கடற்கரையில்லாத மாவட்டம்.

14. வரிக் குதிரை - ஒற்றைக் குளம்பு.


15. அலகாபாத் - மாவட்டத் தலைநகர். மற்றவை மாநிலத்தின் தலைநகர்கள்.

16. கபடி — பந்தில்லாமல் விளையாடுவது.

17. பித்தளை - கலப்பு உலோகம் - மற்றவை தனி உலோகங்கள்.

18. உகாண்டா - ஆப்பிரிக்காவில் உள்ள நாடு - மற்றவை தென் அமெரிக்க நாடுகள்.

19. ஸ்விட்சர்லாந்து - அங்கு குடியரசு. மற்ற நாடுகளில் பெயரளவுக்காவது முடியரசு.



''டேய், அப்புண்ணி! எழுந்திரு-
டிபன் சாப்பிட வா. நல்ல காலம்
என்னை பியூன் எழுப்பி-
னான். இனிமேல்தான் ......''
நாய் ஜாக்கிரதை
சிரிக்கச் சிரிக்க..!
சாமா
''உன்னைக் கண்டு எல்லோரும் நடுங்கணும்னு போட்ட போர்டு இது. அதைப் பார்த்து நீ எதற்கு இப்படிப் பயப்படறே?''
① ②
ஹோட்டல் முதலாளி: சார்! சார்! இது சாதாரண ஹோட்டல் தான். 'டிரைவ் இன்' ஹோட்டல் இல்லே!
முதலாளி
''இந்த ஆபீஸ்ல் நாம் எல்லோரும் ஒரே குடும்பம்னு நான் சொன்னது வாஸ்தவம் தான். அதற்காக நீ 'அப்பா, அப்பா' என்று என்னைக் கூப்பிடணுமா என்ன?''

புகைப்படம் எடுக்கலாமா?

கிருஷ்ணவேணி

நம்முடைய கண்ணினுடைய அமைப்பையும் அது இயங்கும் முறையையும் கொண்டே விஞ்ஞானிகள் காமிராவை உருவாக்கியிருக்கிறார்கள். நீங்கள் காணும் பொருளைக் கண்ணில் உள்ள ரெடினா என்ற திரை எப்படிப் பதிவு செய்கிறதோ, அதே போலத்தான் காமிராவின் உள்ளே இருக்கும் ரசாயனப் பூச்சுள்ள ஃபிலிமில் காட்சிகள் பதிவாகின்றன. காமிராவிலும் கண்ணிலும் முன்னால் லென்ஸ் உள்ளது. அதை மூடித் திறக்கும் அமைப்பும் இருக்கிறது. கண்ணினுள் ஒளி புகும் துவாரமான ஐரிஸ் தேவையான ஒளிக்கு ஏற்பத் தானாகவே சுருங்கி விரியக் கூடிய தன்மை உடையது. காமிராவில் இந்த ஒளியைக் கூட்டக் குறைக்க ஓர் அமைப்பு உள்ளது. இதற்கு ஐரிஸ் டியாஃப்ரம் *(Iris Diaphragm)* என்று பெயர்.

காமிராவை இயக்கிப் படம் எடுப்பது மிகச் சுலபம். காமிராவின் மிக முக்கியமான அம்சம் அதன் முன்னால் உள்ள லென்ஸ்தான். லென்ஸ் எப்படி வேலை செய்யும் என்று உங்களுக்குத் தெரியும். குவிலென்ஸின் மூலம் சூரிய ஒளி பாய்ந்து ஒரு குறிப்பிட்ட புள்ளியில் ஒன்று சேருமில்லையா? இதை நாம் 'ஃபோகஸ்' என்று கூறுகிறோம்.


காமிராவினுடைய லென்ஸுக்குப் பின்னால் 'போட்டோகிராபிக் ஃபிலிம்'

ஒரு படம் (காட்சி) எடுத்தானதும் அந்தக் காட்சி பதிவான பகுதி பிலிமை நகர்த்தி அடுத்த படத்துக்குப் புதிய பகுதியை அமைக்க வேண்டும். இது சுலபமானது. ஒவ்வொரு குறிப்பிட்ட படப் பகுதிக்கும் இலக்கங்களும் தடுப்பானும் காமிராவினுள் உண்டு. எல்லாப் படங்களும் எடுத்தானதும் பிலிமை இருட்டறையில் ரசாயனக் கலவையில் கழுவி நெகடிவைப் பதிவு செய்து (டெவலப்) கொள்ள வேண்டும். பிறகு அந்த நெகடிவிலிருந்து போட்டோக் காகிதத்தில் பாஸிடிவ் பிரிண்டுகளைப் பதிவு செய்தால் எடுக்கப்பட்ட காட்சிகள் நிரந்தரமாகவும் தத்ரூபமாகவும் காட்சியளிக்கும்.

வலப்பக்கமுள்ள படத்தில் ஒரு காமிராவைத் தனித் தனியே பிரித்துப் போட்டு அதன் பாகங்களைக் காட்டி இருக்கிறது.

ரிஃப்ளெக்ஸ் காமிரா என்பது ஒரு வகை. இதில் பெரிய ஃபோகஸிங் திரை இருக்கும். இதிலேயே - ஒரு லென்ஸ் ரிஃப்ளெக்ஸ், இரு லென்ஸ் ரிஃப்ளக்ஸ் காமிராக்கள் உண்டு. ஒரு லென்ஸ் உள்ள காமிராவில் காட்சிகளைக் காணவும், படமெடுக்கவும் ஒரே லென்ஸ் பயன்படும். இரு லென்ஸ் காமிராவில் காட்சிகளைக் காண ஒரு லென்ஸும் படமெடுக்கத் தனி

1. லென்ஸ். 2. ஷட்டரைத் தாங்கும் பாகம் (ஷட்டர் இயங்குவது இம் தனியாக விளக்கப்பட்டுள்ளது.) 3. ஷட்டரின் மூடி. 4. காமிராவின் பிரதான பாகம்-உடல். 5. மேல் மூடி. 6. வ்யூ ஃபைண்டர் (காட்சிகளைக் காட்டும் லென்ஸ் அமைந்த கண்ணுடித் திரை). 7. ஷட்டரை இயங்க வைக்கும் பட்டன். 8. ஃபிலிமைச் சுற்றும் கைப் பிடி. 9. காமிராவின் வளைந்த பின் பக்கம். நகர்த்தித் திறக்கக்கூடியது. 10. ஃபிலிமைச் சமமட்டமாக (ஸ்பிரிங்கினால்) நிறுத்தச் செய்யும் தகடு. 11. ஃபிலிமில் உள்ள எண்களைக் காட்டும் சிவப்பு நிறமான ஜன்னல். 12. ஃபிலிம் ரோல். 13. காமிராவின் பிரதான அமைப்பையும் பின்பக்கத்துக் கதவையும் இணைத்துப் பிடித்திருக்கும் கீல்.



உள்ளது. லென்ஸ் ஒளியை (காட்சிகளை) அந்த ஃபிலிமில் ஃபோகஸ் செய்கிறது. ஃபிலிமில் ரசாயனம் பூசப்பட்டிருப்பதால் ஒளி அதில் பாயும்போது ரசாயன மாற்றம் அடைந்து நெகடிவாகிறது. இப்படி அந்த ஃபிலிம் நெகடிவாக மாற, ஒளி அதன் மீது ஒரு விநாடியில் சில துகள் பொழுதே பாய வேண்டும். இதற்காகவே காமிராவில் 'ஷட்டர்' என்ற அமைப்பு உள்ளது. போட்டோப் படம் எடுக்க வேண்டுமானால் இந்த ஷட்டரைத் திறந்து மூட 'கிளிக்' செய்ய வேண்டும். இது ஓர் உலோக பட்டனால் இயங்குகிறது. உங்கள் கண்களை எப்படி வெகு விரைவாக மூடித் திறக்கிறீர்களோ, அதைப் போன்றதுதான் இந்த ஷட்டரின் செயலும்.

ஷட்டர் திறக்கப்படும்போது லென்ஸ் ஒளியை ஃபிலிமின் மீது ஃபோகஸ் செய்கிறது. லென்ஸ் வழியாக வரும் ஒளி மட்டுமே பிலிமில் பதிவாக வேண்டும். ஆகவே காமிராவின் உட்புறம் எப்போதும் கறுப்பாகவே(இருட்டாக) இருக்கும். நல்ல காமிராவினால் நல்ல புகைப்படங்களை எடுக்க முடியும். எல்லாக் காமிராவிலும் லென்ஸுக்குப் பின்பக்கம் ஒளியை அளவோடு உள்ளே அனுப்ப ஒரு சாதனம் — ஐரிஸ் டயாஃபரம்— உண்டு. இது ஒரு வட்டமான துவாரம் மாறுதலுக்கு உட்பட்டது. டயாஃபரத்தின் அளவு பெரிதானால் அதிக ஒளி உள்ளே புகுந்து பிலிமின் மீது ஃபோகஸாகும். ஆகவே டயாஃபரத்தின் அளவைச் சூரிய ஒளிக்கு ஏற்பக் கூட்டிக் குறைக்க வேண்டும்.

லென்ஸும் இருக்கும். வலப்பக்கத்திலுள்ள படங்களில் இவ்விரு காமிராக்களையும் அவை காட்சிகளைப் பிரதிபலிப்பதையும் காண்கிறீர்கள்.


ஷட்டரின் இயக்கம்


முதல் படம்: (வலப்பக்கம் மேலேயுள்ளது) கிளிக் செய்ய அழுத்தும் பட்டனை அழுத்துவதற்கு முன்பாக ஷட்டரின் நிலை.

இரண்டாவது படம்: கிளிக் செய்ய பட்டனை அழுத்தியதும் — அம்புக் குறியிட்ட பகுதியில் அழுத்தம் கொடுத்ததும் — ஷட்டர் மேல் நோக்கிக் கிளம்புகிறது. இதனால் லென்ஸ் பகுதியின் மறைப்பு நீங்குகிறது. ஒளி உள்ளே புக ஏதுவாகிறது. பட்டனிலிருந்து கையை எடுத்ததும் ஒரு ஸ்பிரிங் ஷட்டரை டயாஃபரத் துவாரம், லென்ஸ் இவைகளின் மேலாக இழுத்து வந்து மூடுகிறது. இதனால் காமிராவினுள் ஒளி பாய்வது தடுக்கப்படுகிறது.


காமிராவும் கண்ணும் (கீழே)

A. லென்ஸ். *B.* டயாஃபரம், *C.* பிலிம் (ரெடினா) காமிரா ஒரு சிறு அறையைப்போன்றதுதான். மூன்றாவது படம் ஐரிஸ் டயாஃபரத்தில் ஒளியைக் கூட்டிக் குறைக்கும் அமைப்பு.






ஒரு லென்ஸ் ரிஃப்ளெக்ஸ் காமிராவும் அதன் இயக்கமும்.



இரு லென்ஸ் ரிஃப்ளெக்ஸ் காமிராவும் அதன் இயக்கமும்.



ஊர்க் கோடியில் இருக்கும் பிள்ளையார் கோயிலில் விளக்கு ஏற்றி வைப்பதைச் சாத்தன் என்னும் கிழவன் தன்னுடைய தினசரி வழக்கமாகவும் கடமையாகவும் கொண்டிருந்தான். அந்தப் பாழடைந்த கோயிலில் கை உடைந்த பிள்ளையார் குடியிருந்தார். அதனால் ஊரார் எவரும் அந்தக் கோயிலுக்குச் சாமி கும்பிடப் போவதில்லை.

மொண்டிப் பிள்ளையாருக்கு விளக்குப் போட வேண்டாம் என்று எத்தனையோ முறை தகப்பனாரிடம் சொன்னான் சாத்தனின் மகன் கூத்தன். அப்போதெல்லாம் சாத்தன், ''சாமியிலே மொண்டிச் சாமி, நொண்டிச் சாமின்னு கிடையாதுடா'' என்று சிரித்துக் கொண்டே சொல்லுவான். ''அந்தச் சாமி நல்ல சாமி. நான் சிறு பையனாக இருக்கும் போது எத்தனையோ தடவை பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். வேண்டியதைக் கொடுக்கும் வள்ளல் அந்தச் சாமி!'' என்பான் சாத்தன்.

''அதுக்காக இப்போது அங்கே ஏன் வீணாக எண்ணெய் விளக்குப் போடுகிறாய்?'' என்று கேட்டான் கூத்தன்.

''சாமிக்காக மட்டும் அல்ல. ஊர்க் கோடியிலே விளக்கு இருப்பது பொதுவாக நல்லதல்லவா? கோயில் வெளிச்சத்தினால் பாட்டையைத் தெரிந்து கொண்டு ஜனங்கள் நடமாடுவார்கள் இல்லையா?'' என்று கேட்பான் சாத்தன்.

கூத்தனுக்கு அதிலே விருப்பமில்லை. ஊர் நலத்துக்காக நாம் நஷ்டப்படுவதா? சாத்தனும் பிடிவாதமாக விளக்கேற்றிக் கொண்டு வரவே, அவன் ஒரு வேலை செய்தான். தகப்பன் போய் விளக்கு ஏற்றிவிட்டு வந்தபின், பிள்ளை கோயிலுக்குச் செல்வான். ''மொண்டிப் பிள்ளையாருக்கு வெளிச்சம் எதுக்கு?'' இருட்டறைப் பிள்ளையாராகவே இருக்கட்டும்'' என்று சொல்லிக் கொண்டே கையில் இருக்கும் குவளையில், விளக்கில் உள்ள எண்ணெயை ஊற்றிக் கொண்டு அந்த அகல் விளக்கை அங்கேயே போட்டு உடைத்துவிட்டு வீடு திரும்புவான்.

எண்ணெய் வீணாகாமல் வீட்டுக்கு எடுத்து வருவது பற்றி அவனுக்கு மிகவும் திருப்தி. தினம் தினம் அகல் விளக்கு உடைந்து போவதைக் கண்டு சாத்தன் ஆச்சரியப்பட்டான். எண்ணெய்ச் செலவுடன் அவனுக்குத் தினந்தோறும் குயவனிடம் மண் அகல் ஒன்று வாங்கும் செலவும் சேர்ந்தது.

ஒரு நாள் சாத்தன் நேரம் சென்று கோயிலுக்கு விளக்கு ஏற்றப் போனான். நன்றாக இருட்டிவிட்டது. விளக்கை அணைப்பதற்காகக் கூத்தனும் அங்கே வந்திருந்தான். இருட்டில் விளக்கை ஏற்றிக் கொண்டே சாத்தன், ''ஆண்டவனே, யாரோ ஒருவன் என்னைப் போல் தினம் உன்னிடம் வருகிறானே, அவனுக்கு நல்ல புத்தி தரக் கூடாதா? ஊராருடைய நலத்துக்காகத்தானே உனக்கு விளக்குப் போடுகிறேன்!'' என்று மனம் குழையப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டான்.

சாத்தன் அப்பால் போனதும் வழக்கம் போல் கூத்தன், விளக்கை ஊதி அணைத்தான். ''இந்த விளக்கினால் யாருக்குப் பிரயோசனம்? சேரி ஜனங்கள் ஊருக்கு வரும் பாட்டையில் இது முனுக்கு முனுக்கு என்று தெரிவதால், பாட்டை முழுதும் வெளிச்சமாகி விடுமா? கழனியில் தடவிக் கொண்டே இருட்டில் வரும் ஜனங்கள், இந்த வெளிச்சத்தைப் பார்த்துக் கால் வீசி நடக்கப் போகிறார்களா?'' என்று சொல்லிக் கொண்டான்.



மொண்டிப் பிள்ளையார்

ஜ. ஜகந்நாதன்

மறு நாள் மாலையில் பிசுபிசு என்று தூறிக் கொண்டிருந்தது. இடியும், மின்னலுமாய் மழை வலுக்கும் போல் இருந்தது. சாத்தன் வழக்கப்படி விளக்குப் போடவேண்டும் எனக் கிளம்பினான்.

'மழையில்கூட விளக்குப் போட வேண்டும் என்ற பிடிவாதத்துடன் கிழவன் கிளம்புகிறானே' என்று எண்ணிக் கொண்டு கூத்தனும் கிளம்பினான். அவனுக்கு வெளியே போக வேறு வேலையும் இருந்தது. தன் வேலையை முடித்துக் கொண்டு கோயிலை நோக்கி நடந்தான்.

'பிசுபிசு'வென்றிருந்த தூற்றல் மாறி பெரு மழை பொழிந்தது. சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே கூத்தன் கோயிலுக்குள் சென்றான். கோயில் ஒரே இருட்டாக இருந்தது. காற்றில் விளக்கு அணைந்திருக்கும் என்று எண்ணிக் கொண்டே விளக்கு இருக்கும் கல் மாடத்தைத் தடவினான். விளக்கே இல்லை; பிள்ளையாரின் காலடியில் காற்றுக்கு அடக்கமாக வைக்கப்பட்டிருக்கிறதோ என்று தடவிப் பார்த்தான். சாத்தன வந்திருந்தால் தானே விளக்கு இருக்கும். கூத்தன் வயசுப்பிள்ளை. வேகமாக வந்து விட்டான். சாத்தன் கிழவனல்லவா? தவிர மழை வேறு. அவன் இன்னும் வரவில்லை.

திடீரென்று அவன் கால் மீது ஏதோ வழுவழுவென்று நெளிவதுபோல் தோன்றிற்று. ''ஐயோ....!'' என்று அலறிக் கொண்டே அவன் காலை உதறினான். காலடியில் பிள்ளையார் சிலையின் ஒடிந்த கை கிடந்தது. பளிச்சுப் பளிச்சென்று வானம் மின்னிற்று. அந்த மின்னல் வெளிச்சத்தில் கோயிலுக்குள் இருந்து பாம்பு ஒன்று சரசரவென்று செல்வதைக் கூத்தன் பார்த்தான். பயத்தால் அவன் உடம்பு நடுங்கிற்று. என்றாலும் சமாளித்துக் கொண்டு, கீழே கிடந்த பிள்ளையாரின் கையை எடுத்துப் பாம்பின் மீது ஓங்கி வீசினான்.

கல்லை வீசின பிறகும், அவனால் உள்ளே தனியே இருக்க முடியவில்லை. வெளியே ஓடவும், பயமாக இருந்தது. ''இப்போது இங்கே அகல் விளக்கு இருந்தால் உதவியாக இருக்குமே!'' என்று எண்ணினான்.

மழை ஓய்ந்ததும், யாரோ உள்ளே வருவது போலக் கூத்தனுக்குத் தோன்றிற்று. வருகிறவனை எச்சரிக்கை செய்ய ''பாம்பு பாம்பு!'' என்று கத்தினான்.

உள்ளே வந்தவன், ''எங்கே? எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே தன்னுடைய கையில் இருந்த நெருப்புக் குச்சியைக் கிழித்தான். வெளிச்சத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். வந்தவன் சாத்தன் தான்!

வழக்கம்போல் பிரார்த்தனை செய்து கொண்டே அவன் அகல் விளக்கை ஏற்றினான். அந்த மங்கிய வெளிச்சத்திலேயே கூத்தன் வாசலுக்கு வந்தான். காலில் மீண்டும் வழுவழுப்பாகத் தட்டுப் பட்டது. விளக்கு வெளிச்சம் இருந்ததால் அவன் பயப்படவில்லை. நிதானமாகக் கூர்ந்து பார்த்தான். பாம்பினுடைய தலையை நசுக்கிக் கொண்டு பிள்ளையாரின் கை கிடந்தது.

மொண்டியானாலும் பிள்ளையார் தானே தன்னைக் காப்பாற்றினார் என்று எண்ணியபோது கூத்தனுக்கு உடம்பு புல்லரித்தது. அவன் உள்ளே சென்று பிள்ளையாரை வணங்கினான்.

மறு நாளிலிருந்து சாத்தன் இருட்டில் தட்டுத் தடுமாறிக் கொண்டு கோயிலுக்கு வருவதில்லை. வீட்டில் இருந்தவாறே அவன் சாமியைக் கும்பிடுவான். கூத்தன்தான் இப்போது தினம் மாலை வேளையில் கோயிலுக்குப் போய் விளக்கு ஏற்றிவிட்டு வருகிறான். பிள்ளையாரின் ஒடிந்த கையையும் அவன் ஒட்ட வைத்திருப்பதாகக் கேள்வி!



பறக்கும் விநோதப் பிராணிகள்



சுவாமிநாத காசிநாதன்

பறவைகள்தான் பறக்கும் இயல்புடையவை என்பது அனைவரும் அறிந்த உண்மை. இக்கூற்றுக்குப் புறம்பாக, மீன் வகையிலிருந்து ஏனைய பாலூட்டி வகுப்புப் பிராணிகள் வரை, பல்வேறு பிராணிகள் பறக்கும் ஆற்றலையுடையதாயிருக்கின்றன. என்னே இயற்கையின் விந்தை!


எக்ஸாசிடஸ் (Exocoetus) என்பது ஒருவகை பறக்கும் மீன். இது முக்கியமாக நதி முகத்துவாரத்தில் காணப்படும். இவற்றின் தோள் துடுப்புக்கள் இறக்கை போல் வளர்ந்து விரிந்து காணப்படும். இத்தோள் துடுப்புக்களை உபயோகித்து நீரில் வேகமாக நீந்திச் சென்று, அந்த வேகத்தினால் (விமானத்தைப் போல) உயர எழும்புகின்றன. இவைகள் இரண்டு அல்லது மூன்று கெஜ தூரம் பறக்க முடியுமே தவிர, வெகுதூரம் பறந்து செல்ல முடியாது. சில சமயங்களில் இருபத்தைந்து அடி உயரம் கிளம்பி ஆயிரம் அடி தொலைவு பறப்பதும் உண்டு. அப்படிப் பறந்து கொண்டிருக்கும்பொழுது காற்று வீசினால் நீராவிக் கப்பல்களிலும், பாய்மரக் கப்பல்களிலும் பாய்ந்து போய் விழுவதுமுண்டு.

துடுப்புக்கால் தவளை (Rhawphorus) இலங்கை, சுமித்திரா, ஜாவா, போர்னியோ போன்ற தீவுகளில் அதிகம் காணப்படுகின்றன. இது ''தேரை'' இனத்தைச் சேர்ந்தது. மரத்தில் வாழும் இயல்புடையது. இதன் பின்னங்கால்களில் மட்டுமின்றி முன் கால்களிலும் விரல்கள் சவ்வுத் தோலால் (Web) இணைக்கப் பட்டிருக்கின்றன. விரல் நுனிகளில் உறிஞ்சிகள் (Suckers) இருக்கின்றன. மரத்தின் மேல் ஏறுவதற்கு இவ்வுறிஞ்சிகள் உபயோக முள்ளதாய் இருக்கின்றன. மரம் விட்டு மரம் பாயும்பொழுதும், மரத்திலிருந்து தரையில் குதிக்கும்பொழுதும் சவ்வுத் தோல்கள் விரிந்து, ஆகாய விமானத்தின் இறக்கை போல் உபயோகப்படுகின்றன.

பறக்கும் பல்லி (Flying lizard) திருவனந்தபுரம், மலபார் ஆகிய இடங்களில் உள்ள வாழைத் தோட்டங்களில் அதிகம் காணப்படுகின்றன. இப் பல்லியின் வயிற்றுக்கு இரு பக்கங்களிலும் அகலமாக விரிந்திருக்கும் தோல் தசையை ஐந்தாறு விலா எலும்புகள் ஒவ்வொரு பக்கத்திலும் உறுதிப்படுத்துகின்றன. இந்தப் பல்லி பறக்கும் பொழுது விசிறியைப்போல் இது பரந்து விரிந்தும், உட்கார்ந்திருக்கும் போது மடிக்கப்பட்டும் இருக்கும். மரம் விட்டு மரம் தாவிப் பறக்கும்பொழுது இந்த விசிறிபோன்ற தசை உபயோகமுள்ளதாக இருக்கிறது. மேலும் கழுத்துக்குக் கீழே இருக்கும் மூன்று முட்கள் போன்ற உறுப்புக்கள் அப்பல்லி தரையில் இறங்கும்போது பிடித்துக் கொள்ளச் சாதகமாய் இருக்கின்றன.

டைக்கோஜூன் (Ptychozoon) என்ற மற்றொரு வகைப் பறக்கும் பல்லி மலேயா நாட்டிலும், கிழக்கு ஆசியாவிலும் பெரும்பாலும் காணப்படுகிறது. இப்பல்லியின் தோல் கழுத்திலிருந்து முன் கால்களுக்கும், பிறகு பின் கால்களுக்கும், வாலுக்கும் பரந்து அகன்று காணப்படுகிறது. இந்த ஆரஞ்சு நிறச் சவ்வு பறக்க உபயோகமுள்ளதாயிருப்பதுடன், பெண் பல்லியை ஆண் பல்லி தன் வசம் கவரவும் பயன்படுகிறது.

டிரோடாக்டைல் (Pterodactyl) என்பது ஊர்வனவற்றில் ஒன்றாகும். இன்று இவ்வகைப் பிராணிகள் கிடையா. இதன் இனமே மறைந்து விட்டது. இதன் சிறு விரல் நீளமாக வளர்ந்துள்ளது. அதினின்று தோல் சவ்வு பரந்து, கால்கள் வரை வளர்ந்துள்ளது. இது குன்றுகளின் உச்சியினின்று சிறிது தூரம்



இளம்பித் தண்ணீரில் மீனைத் தேடிச் செல்லும்.


பறக்கும் தேவாங்கு (Flying Lemurs) காலியோபிதெகஸ் (Galeopithecus) என்னும் பறக்கும் தேவாங்குகள் ஆர்க்கிபெலாகோ காட்டில் காணப்படுகின்றன. மரத்திலிருந்து மரம் தாவுவதற்குச் சிறந்த தேகவமைப்பு பெற்றிருக்கிறது. கழுத்திலிருந்து முன்னங் கால்களுக்கும் பிறகு பின்னங் கால்களுக்கும் வாலுக்கும் நடுவே அகன்ற சவ்வு உள்ளது. இது மரத்துக்கு மரம் பறப்பது போலச் சறுக்கிச் செல்கின்றன. மாலை நேரத்தில் இவ்வாறு செய்யும். பகல் நேரத்தில் மரத்தினின்று தொங்கிக் கொண்டிருக்கும்.

பறக்கும் அணில் (Flying Sqirrel)

இது இந்தியாவிலும், மலேசியாவிலும் வசிக்கிறது. மூன்று அடி மொத்த நீளமுடையது. செந்நிறமாகவும், வெள்ளை கறுப்பு புள்ளியுடையதாகவும் இருக்கும். ரோமங்கள் நிறைந்த சருமத்தை உடையது. இமயமலைச் சாரலில் வசிக்கும் அணில் பதினெட்டு அடி நீளமுடையது. மத்திய கிழக்கு ஆப்பிரிக்காவில் காணப்படுபவையெல்லாம் பத்து அடி நீளமேதான். பொதுவாக ஐம்பது முதல் அறுபது அடி வரை பறந்து செல்லும். சில சமயங்களில் இருநூறு அடி பறக்கும் ஆற்றலை உடையது. கொட்டைகளையும், இலைகளையும் பறவை முட்டைகளையும் ஆகாரமாக உட்கொள்ளும். இதனைச் சுலபமாகப் பழக்க முடியும். அதிகக் குறும்புத்தனம் செய்யும்.

வௌவாலின் (Bat) உடலமைப்பு காற்றில் பறப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. பறப்புச் சவ்வுகள் கைவிரல்களிலிருந்து, முன் கால், பின் கால், வால் வரை பரவியுள்ளது. பகல் வேளைகளில் குகை அல்லது மரப் பொந்துகளில் பின் கால் விரல்களால் பிடித்துக் கொண்டு தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும். இரவில் இரை தேடிப் பறந்து செல்லும்.

பழந் தின்னி வௌவால், நரியைப் போன்று நீண்ட மூக்கை உடையதாயும், மலேயா, ஆர்க்கி பெலாகோ, இந்தியா போன்ற நாடுகளில் ஏராளமாயும் காணப்படும். இவைகளின் இறக்கை பிரிக்கப்படும் பொழுது ஐந்து அடி நீளமுடையதாக இருக்கும். இரவு நேரங்களில் இவை கூட்டம் கூட்டமாக இரை தேடிச் செல்லும். இவை பழத் தோட்டங்களை ஏராளமாகச் சேதப் படுத்துகின்றன; அதனால்தான் இந்தப் பிராணியை நாட்டுக்குள் கொண்டு வரக் கூடாது என்று அமெரிக்க அரசு சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறது.



வாடாமலர்


★

ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால் பணமோ, குணமோ, வலிமையோ, வனப்போ அவனுக்குப் பயன் படாது. - அரிஸ்டாட்டில்

★

உலகில் இரண்டு கடினமான வேலைகள் உள்ளன. ஒன்று நல்ல பெயர் எடுப்பது; இரண்டாவது அதைக் காப்பாற்றிக் கொள்வது. - ராபர்ட் சூமன்

★





தெரியுமா?

1097. பாம்பின் கண்களுக்கு மூடி (ஐ லிட்) கிடையாது. அப்படியானால் அதன் விழிகளைக் காப்பது எது ?

1098. உலகின் மிக நீளமான குகைப் பாதை ((Road Tunnel) எது, அதன் நீளம் எவ்வளவு ?

1099. இங்கிலாந்து நாட்டைக் குறிக்கும் மலர் எது ?

1100. ரேடியத்தைக் கண்ட மேரி க்யூரி எந்த நாட்டில் பிறந்தவர் ?

1101. புதையல் தீவு (Treasure island) என்ற புகழ்பெற்ற சிறுவர் இலக்கியத்தின் கதாநாயகனின் பெயர்என்ன?

1102. புகழ்பெற்ற கடற்படை வீரர் ஹொரேஷியோ நெல்ஸன் தமது வலது கையை இழந்தது எங்கே, எப்போது ?

1103. நெல்ஸனுக்கு வைகௌண்ட் பதவியை வாங்கிக் கொடுத்த வெற்றிப் போர் முனை எது தெரியுமா ?

1104. எந்தப் போர்முனையில் நெல்ஸன் மரணமடைந்தார் ?

1105. முதன் முதலில் எங்குமே தரை இறங்காத டிரான்ஸ் அட்லாண்டிக் விமானப் பயணம் எப்போது — யாரால் பறக்கச் செய்யப்பட்டது ?

1106. முதல் ஜெட் விமானத்தின் பெயர் தெரியுமா ? எப்போது பறக்க விடப்பட்டது.

1107. புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியரான கை டி மாப்பஸான் எங்கு பிறந்தார் தெரியுமா ?

1108. ஸாமர்ஸெட் மாம் என்பவர் புகழ்பெற்ற நாவலாசிரியராவதற்கு முன்பு என்ன தொழில் செய்து வந்தார் ?

1109. சார்லஸ் டிக்கன்ஸ் *1870*ல் இறந்த போது ஒரு நாவலை எழுதிக் கொண்டிருந்தார். அது முடிக்கப்படவில்லை. அதன் பெயர் என்ன?

1110. அலெக்ஸாண்டருக்குப் பல போர்களில் வெற்றி தேடிக் கொடுத்த குதிரையின் பெயர் என்ன?

1111. ராஜா தேசிங்கு என்ற புகழ்பெற்ற தமிழ் நாட்டு வீரனைப் பற்றித் தெரிந்திருக்குமே, உங்களுக்கு. அந்த வீரனோடு தொடர்புடைய குதிரையின் பெயர் என்ன?

1112. மெக்ஸிகோவின் புராதன இனத்தவரின் அஸ்டெக் சாம்ராஜ்யத்தை அழித்தது யார் தெரியுமா?

1113. அலெக்ஸாண்டர் மெக்கன்ஸி என்பவர் புகழ்பெறக் காரணமாக இருந்தது எது ?


1114. போர்த்துகலிலிருந்து கிளம்பி ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு கடல் மார்க்கமாக இந்தியா வந்த முதல் ஐரோப்பியர் யார் ?

1115. பசிபிக் கடலுக்கு அந்தப் பெயரைச் சூட்டியவர் யார் ?

1116. பாபிலோன் என்ற புகழ்பெற்ற புராதன நகரம் எந்த நதிக்கரையில் இருந்தது தெரியுமா ?

1117. எகிப்தியர்களின் கொடுமையிலிருந்து இஸ்ரேலியர்களை விடுவிக்க அவர்களை மோசஸ் அழைத்துச் சென்ற போது எந்தக் கடல் பிரிந்து வழி விட்டது ?

1118. புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு நகரம் எந்த நதிக் கரையில் இருக்கிறது?



தெரியுமே!

விடைகள்: 1097. கண் விழியின் மீது கண்ணாடி போன்ற ஒரு செதிள் மூடியிருக்கிறது. 1098. மாண்ட் பிளாங்க் குகைப் பாதை 15,771 அடிகள் நீளம். ஸ்விஸ் ஃப்ரான்ஸ் நாடுகளை இணைக்கிறது. 1099. ரோஜா. 1100. போலந்திலுள்ள வார்ஸா நகரில். 1101. ஜிம் ஹாக்கின்ஸ். 1102. டெனரிஃப் என்ற இடத்திலுள்ள ஸான்டா க்ரூஸில் 1797ல். 1103. கோபன் ஹேகனில் 1801ல் அடைந்த வெற்றி. 1104. டிரஃபால்கர் போரில். 1105. 1919 ஜூனின் 14ல் காப்டன் ஜே. டபிள்யூ. ஆல்காக், லெப்டினண்ட் ஏ. விட்டன் பிரௌன் ஆகியவர்களால். 1106. ஜெர்மன் ஹெங்கல் ஹீ 178 என்று பெயர். 1939, ஆகஸ்ட் 27ல். 1107. நார்மண்டியிலுள்ள மிரோமெஸ்னில் என்ற இடத்தில். 1108. டாக்டராக இருந்தார். 1109. எட்வின் ட்ரூட் (Edwin Drood) என்ற நாவல். 1110. புஸிஃபாலஸ். 1111. நீலவேணி 1112. பெர்னாண்டோ கார்ட்ஸ் என்ற ஸ்பானிஷ்காரர். 1113. வட அமெரிக்காவை முதன் முதலில் கடந்தவர் இவர். அதனால் புகழ். 1114. வாஸ்கோ ட காமா. 1115. போர்த்துகீசிய மாலுமியான ஃபெர்டினண்ட் மெகல்லன். 1116. யூஃப்ரெடஸ் நதிக் கரையில். 1117. செங்கடல். 1118. தேம்ஸ் நதியில்தான். ஆனால் அதற்கு இந்த இடத்தில் ஐஸிஸ் என்று பெயர்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...



50 F-203TM